967

967/4-11

REGISTERED No. M. 6165 ந. பை. 13

பத்ஹுல் இஸ்லாம்

FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

டிசம்பர்—1957

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
- DEC 1957
MADRAS

விஷயம். பக்கம்.

முஸ்லிம் சமூகத்தின் பரிபாலனை எது? 1
மாநிலம் மறக்க முடியாத மாவீரர் ... 9
மருத காயகம் என்ற பூலோபகாரம்
(டி. எப். ஆர். மஆலி ஸாஹிபு-பாகவி) 13
தொழுகை பற்றிய சில ஹதீது ஆதாரங்கள்
(ரஹ்மத் பாகவி) 15
திருக்குர்ஆன் சாரசங்கிரஹம்
(ரஹ்மத் பாகவி) 20
சிறைப் பறவை சிப்கத்துல்லா அல்லது
துப்பு துலக்கிய தூயவர் 23
முஸ்லிம் மன்னரின் ஹிந்து ராணிகள்
(டி. எப். ஆர். மஆலி ஸாஹிபு-பாகவி) 26
...ின் ஆகாச யாத்திரை (சிறுவர் பகுதி)
...ர். மஆலி சாஹிப்-பாகவி) 29

...இஸ்லாம் ஆபீஸ்:
...ரோட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

JL
இ7ளாடு11, NK4F1
N57.
187069

பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

வருஷ சந்தா ரூ. 1–50

தனிப் பிரதி நயா பைஸா. 13

மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா ரூ. 2–00

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

அறபு த:லீமுல் புர்கான் பீ எஸ்ஸர்னல் குர்ஆன்

இது சிறு குழந்தைகள் அரபி ஓத சுலபமாய் கற்றுக் கொள்ள, புதிய முறையில் எழுதியுள்ள அரபி காயிதா. இதில் ஒவ்வொரு பாடத்திற்கு முன்பும் அந்த பாடத்தைக் குழந்தைகளுக்கு எவ்வாறு கற்றுக்கொடுக்க வேண்டுமென்ற ஒஸ்தாத்மார்களுக்கு குறிப்பும் அறபுத் தமிழில் போடப் பட்டுள்ளது. இதை அழகாக பெரிய எழுத்தில் எழுதி போட்டோ பிளாக் செய்து கிளேஸ் காகிதத்தில் அச்சிடப் பட்டிருக்கிறது. இரண்டு பாகங்களும் சேர்ந்தது.

விலை நயா பைஸா. 40

எஸ்ஸர்னல் குர்ஆன் லாகூர் ஸ்டைல் பெரியது ந பை. 64

மேற்படி சிறியது விலை நயா பைஸா. 40

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதரஸ் 5.

فتح الاسلام

பத்ஹுல் இஸ்லாம்

டிசம்பர்—1957.

முஸ்லிம் சமூகத்தின் பரிபாஷை எது?

உலகம் எவ்வளவோ முன்னேற்றமும் நாகரிகமும் அடைந்து போய் இருக்கிறது. மனிதனும் எவ்வளவோ பரிபக்குவமும் நற்பண்பும் அடைந்து போயிருக்கின்றான். வாழ்க்கை முறையிலும், பழக்க வகையிலும், பேச்சுப் பண்பிலும் மனிதன் மிக மிக முன்னேற்றம் அடைந்துள்ளான்.

“கிழக்கு கிழக்குத்தான்; மேற்கு, மேற்குத்தான்; கிழக்கும் மேற்கும் ஒருபோதும் சேராது” என்று ஒரு காலத்தில் கூறப்பட்டு வந்தது. ஆம், அந்தக் காலத்தில், கால தேசவர்த்தமானமும் சூழ்நிலையும் அப்படித்தான் இருந்துவந்தன. கீழ்தேசத்தி லிருப்பவன் மேல்தேசத்துக்குப் போக முடியாது; மேல்தேசத்திலிருப்பவன் கீழ்தேசத்திற்கு வர இயலாது. எனவே, கீழ்நாட்டானுக்கும் மேல்நாட்டானுக்கும் பரிச்சயமும் நேசமும் இல்லாமலேயே, பற்றுதல் இல்லாமலே, உலக நிலைமை இருந்து வந்தது.

ஆனால் இன்றைய உலக நிலைமையோ வேறு. பலப்பல துறையிலும் மகத்தான மாறுதல்கள் ஏற்பட்டுப் போயிருக்கின்றன. கீழ்நாடும் மேல்நாடும் ஒன்று சேர்ந்து விட்டன. கீழ் நாட்டுக்கும் மேல் நாட்டுக்கும் இடையில் பிரித்து வைத்த மகா சமுத்திரங்களின் தடையும் இப்போது எடுப்பட்டுப்போய் விட்டது. தரைப்பாட்டைகளிலும்

தற்போது எல்லை வித்தியாசங்கள் அற்றுப்போய் விட்டன. ஆகாயத்தில் கூட மனிதனின் முயற்சியானது, எல்லைக்கடந்துபோய் என்னென்னமோ சாதித்துக் கொண்டிருக்கிறது.

வண்டி, வாகன சாதனங்கள் நவநவமான வகைகளில், நாடுகளில் மலிந்து போய்விட்டன. பெரும் பட்டணம்போன்ற கப்பல், சமுத்திர ஜலத்தை மீறிப் பிளந்து கொண்டு நீர்மேல் மிதந்து செல்கிறது. ஆகாய மண்டலத்திலே காற்றை விடவும் மின்னலை விடவும் மிகவேகமாக, ஆகாயவிமானங்கள் பல—நூறு பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு பறந்து போய், சொற்ப காலத்தில் உலகத்தைச் சுற்றிச் சுற்றி வந்து விடுகின்றன.

சில மணிநேரத்துக்குள் மேல்நாட்டான் கீழ் நாட்டுக்கு வந்து விடுகிறான்; அதே நேரத்திற்குள், கீழ்நாட்டான் மேல் நாட்டுக்குப் போய்விடுகிறான். இங்ஙனம் காலநிலையிலும், உலகப்போக்கிலும் லோகாயத விவகாரங்களிலும், பொதுவாக மனிதர் சமுதாயம் ஒன்றித்து, ஐக்கியப்பட்டுப் போய்விட்டதால், பகிரங்க விஷயங்களில் சர்வலோக மாந்தர்களில் எவ்வித வித்தியாசமும் கிடையா தென்று சொல்லிவிடலாம்.

இன்றை உலகில் ஐரோப்பியனுடன் அமெரிக்கன் பழகுகின்றான்; அமெரிக்கனுடன் ஆப்ரிக்கன் பழகுகின்றான்; ஆப்ரிக்கனுடன் இந்தியன் பழகுகின்றான்; இந்தியனுடன் அரபியன் பழகுகின்றான்; அரபியனுடன் ஆர்மேனியன் பழகுகின்றான்; ஆர்மேனியனுடன் ஜப்பானியன் பழகுகின்றான்; ஜப்பானியனுடன் ரஷ்யன் பழகுகின்றான்; ரஷ்யனுடன் பாக்கிஸ்தானியன் பழகுகின்றான்; பாக்கிஸ்தானியனுடன் சீனன் பழகுகின்றான்-இவ்வாறாக எல்லோரும் எல்லோருடன் பழகுகின்றார்கள்.

ஒரு தேசத்தான், இன்னொரு தேசத்துடன் பழகும்போது, விவகாரம் செய்யும்போது, பேசித்தான் தீரவேண்டியிருக்கிறது. இதே விதம் ஒரு மதத்தான் இன்னொரு மதத்தானுடன் பழகும்போதும் ஆத்மார்த்த விஷயமாய் ஒரு பொதுப் பாஷையில் பேசத்தான் வேண்டியிருக்கிறது. உதாரணமாக சீனநாட்டிலிருப்பவன் பாக்கிஸ்தானுக்கு வந்தால், சீனத்தவன் பாக் முஸ்லிமுடன் எப்படிப் பேச முடியும்? அவனுக்கோ உர்து மொழி தெரியாது; இவனுக்கோ சீனப்பாஷை தெரியாது. இப்படிப்பட்ட நிலைமையில் என்ன செய்வது?

18704

ஊமைகளைப்போல் சமிக்ஞை செய்து, ஆ—உ—இ—என்று உளறித் திணறி, கருத்துக்களை பரஸ்பரம் தெரிவித்துக் கொள்ள வேண்டுமா? இப்படியும் முன்னொரு காலத்தில் நிகழ்ந்துதான் வந்தது. ஆனால் இப்போது அந்த இரண்டு அன்னியரும் பரஸ்பரம் பேசிப் பழகி விவகாரம் புரிந்து கொள்வதற்கு, சர்வ தேச பொதுப் பாஷை ஒன்று இருந்து வருகிறது. அது எது வென்று நாம் வெளிப்படையாய் சொல்லவேண்டிய தில்லை.

இதே விதமாகத்தான், அரபுதேச மன்னர் அமெரிக்காவுக்குப் போனாலும், அமெரிக்க தேச ஜனாதிபதி அரபு நாட்டுக்கு வந்தாலும் அவர்கள் பரஸ்பரம் பேசி, கருத்து பரிமாறிக் கொள்வதற்குப் பொதுப் படையான பரிபாஷை யொன்று இருந்து வருகிறது.

இப்போது ரஷ்யாவுக்கும் இந்தியாவுக்கும் நெருங்கிய உறவு ஏற்பட்டு வருகிறது. நம் பாரத நாட்டு அபிவிருத்தி திட்டங்களுக்குத் தேவையான இயந்திர சாமான்களையும் உபகருவிகளையும் கோடிக் கணக்கான ரூபாயில், சோவியத் ரஷ்யா கடனாக கொடுத்து உதவப் போவதாக கேள்விப்படுகின்றோம். தற்போது, இந்தியக் கலைஞர்களும் தலைவர்களும் அடிக்கடி ரஷ்யாவுக்குப் போய் உறவு ஏற்படுத்திக் கொண்டு வருகின்றார்கள். இந்தியாவிலும் ரஷ்ய அதிகாரிகள் தங்கி யிருந்து கொண்டு நட்புறவுப் பிரசாரம் புரிந்து வருகின்றார்கள்.

இவர்களெல்லோரும் தங்களுக்குள் ஒரு பொது மொழியை பரிபாஷையாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பரிபாஷை, பரஸ்பரம் இரு சாராராலும் புரிந்து கொள்ளத்தக்க நயமும் நளினமும் சுலபமும் சுவாரஸ்யமும் உடையதாய் இருக்கின்றது.

ஒரு இந்திய அதிகாரி, அயல் நாட்டு உறவுகளையும் உதவிகளையும் நாடி, உலகத்தின் பலப் பலதேசங்களுக்கும் பலப்பல நாடுகளுக்கும் போய் பலப்பல சமூகத்தாருடன் பேசிப் பழக வேண்டியிருக்கிறது: சீனா, ஜப்பான், அமெரிக்கா, கானடா, இங்கிலாந்து, பிரெஞ்ச், ஜெர்மனி, ரஷ்யா, அரபியா, ஈரான், இராக், துருக்கி, ஆப்கானிஸ்தான், பாக்கிஸ் தான் முதலிய நாடுகளுக்கெல்லாம் போய் வரவேண்டியவராய் இருக் கின்றார். அப்படிப்பட்ட ஒரு பிரமுகர், அந்த அந்த தேசங்களில் எல்லாம் பேசப்படும் எல்லா மொழிகளையும் கசடறக் கற்றுக் கொண்டு பேசத் தெரிந்து கொண்டுதான் போக வேண்டு மென்றால், இது சாத்தியமான காரியமா? இல்லவே இல்லை. ஆகையால்தான், அகில

உலக மன்பதைகளால் பரஸ்பரம் சுலபமாய் இலகுவாய், புரிந்து கொள்வதற்கு ஒரு பொது மொழியான பரிபாஷை அத்தியாவசியம் வேண்டற்பாலதாகும். அவ்வித ஒரு பொதுப் பாஷை இருப்பதால் தான், நம் பாரத நாட்டு அருமைப் பிரதமர் ஜவாஹிர்லால் நேஹ்ரு, சீனு, ஜப்பான், ரஷ்யா, அரபியா முதலிய பலப்பல தேசங்களுக்கும் போய் வருகின்றார்; அந்தந்த தேசத்தாரும் நம் இந்திய நாட்டுக்கு வந்து போகிறார்கள்.

சர்வதேச, அகில உலக பொதுமொழி என்னும் கௌரவம் இக் காலே ஆங்கிலம் என்னும் ஐரோப்பிய இங்கிலிஷ் பாஷைக்கு இருந்து வருகிற தென்பதை, பள்ளிக்கூடப் பிள்ளைகளும் அறிகிறார்கள். எனவே, ஆங்கிலம் படிப்பதும், ஆங்கிலம் எழுதுவதும், ஆங்கில நாகரிகம் அறிவதும், அதன்படி நடப்பதும் இன்னொரு பெரும் கௌரவமாகவே கருதப்பட்டு வருகிறது.

அது அங்ஙனமிருக்க, நம் இந்துஸ்தானத்தில் ஒரு சில தலைவர்கள், பகிரதமாய் மொழி வேற்றுமைப் பிரச்னையிலும் சர்ச்சை யிலும் ஈடுபட்டுழன்று வருகிறார்கள். இந்திய நாட்டுக் கலாசார, பள்ளிக்கூட, கலாசாலைப் பாடபோதனு முறை வரைக்கும் சர்ச்சிக்கப் படும் பரிபாஷைப் பிரசனையை மட்டும் கவனிப்போம்:—

நம் இந்தியா தேசம் சுதந்தரம் அடைந்து பத்தாண்டுகளுக்கு மேலாகிவிட்டது. அரசியல் துறைகளில் எத்தனையோ மாறுதல் ஏற்பட்டுவிட்டன. எத்தனையோ வகையில் நாம் முன்னேற்றமடைந்து விட்டோம். பல திட்டங்கள் போட்டு நாட்டை நம் தலைவர்கள் மேன்மைக்குக் கொண்டு வந்துவிட்டார்கள். ரயில் போக்குவரத்து, தபால் தந்தி நிலையம், இன்ஷ்யூரன்ஸ் எனப்படும் மக்கள் உயிர்ப் பாது காப்பு அலுவல், நகரத்தில் பஸ்—மோட்டார் போக்குவரத்து, பலப் பல கைத்தொழில் முதலியவைகளை யெல்லாம் நம் அரசாங்கத்தார் "பொதுவுடைமை" யாக்கி, நன்கு நிர்வகித்து, நல்லூதியம் கண்டு, நல்லாட்சிப் புரிந்து வருகின்றார்கள். இதெல்லாம் மிகமிகப் பாராட்டு தற்குரிய விஷயங்களாகும்.

ஆனுல் இந்தியா முழுமைக்கும் வேண்டிய ஒரு பரிபாஷை விஷயத்தில், ஒரு சில தலைவர்களும் ராஜ்ய அதிபர்களும் பின்பற்றும் கொள்கையும் முறையும் மனப்பான்மையும்தான் விரும்பத் தகாதவை களாக இருந்து வருகின்றன.

உலகமெல்லாம் சுற்றுப் பிரயாணம் செய்வதற்கும், உலக ஜனங்களுடன் பழகுவதற்கும் பொதுப் பரிபாஷையாக ஆங்கிலம் உபயோகிக்கப்பட்டு வருகிறது. அங்ஙனம் இந்தியா முழுவதிலும் சுற்றுப் பிரயாணம் செய்யும்போது, பல ராஜ்ய-மாகாண மக்களுடன் நாம் பழகும்போது எந்த மொழியைக் கொண்டு பேசுவது என்ற பிரச்னை மிகச் சிக்கலாக இருந்து வருகிறது.

பொதுவாக ஒரு 'மதராசி' (சென்னை வாசி) பம்பாய் நகரமாகிய கூர்ஜர நாட்டுக்கு ஏதோ ஒரு காரியார்த்தமாய் போகிறான் என்று வைத்துக் கொள்வோம். அந்த மதராசி, அந்த பம்பாய் நகரில் வண்டிக்காரனும், அங்காடிக் கடைக்காரியும், பொது வியாபாரியும் என்ன மொழி பேசுகிறார்கள் என்பதைக் கூர்ந்து கவனிக்கிறான். சென்னையிலும் ஒரு சாரார் சாதாரணமாய்ப் பேசும் ஹிந்துஸ்தானி மொழியில்தான் பேசுகிறார்கள் என்பதை அறிந்து சிறிது சந்தோஷப் படுகிறான். தனக்குத் தெரிந்த ஹிந்துஸ்தானி, (அல்லது ஹிந்தி, அல்லது உர்தூ, அல்லது தக்கனி) மொழியில் பேசுகிறான். அவர்களுக்கு கருத்து விளங்குகிறது. மேலும் அவர்களுடன் பழகுகிறான். கொள்வினை, கொடுப்பினை புரிகின்றான். லாபமும் அடைகின்றான்; காரியசித்தி அடைகின்றான்.

அங்ஙனமே அந்த மதராஸி, மத்திய ராஜ்யத்தில் டில்லி (தெஹ்லி) மா நகரத்துக்குப் போகிறான். அங்கும் இதே மாதிரி பாமர ஜனங்கள் பேசும் ஹிந்துஸ்தானி என்னும் உர்தூ மொழியில் சம்பாஷித்துப் பேசிப் பழகி பெரும் பயன் அடைகிறான். இதே மாதிரி அவன், நம் பாரத வர்ஷம் எனப்படும் இந்தியா முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்வதற்கு உர்தூ-ஹிந்துஸ்தானி மொழியையே பரி பாஷையாகக் கொண்டு பயன் அடைகின்றான்.

இதனால் நாம் என்ன தெரிந்து கொள்கிறோம் என்றால்: ஒருவனுக்கு பொதுப்படையான ஹிந்துஸ்தானி எனப்படும் உர்தூ மொழி தெரிந்திருந்தால், அவன் அகில இந்தியா முழுமையுமென்ன, பாகிஸ்தானுக்குக்கூட போய் வியாபாரம் செய்து, விவகாரம் புரிந்து பயன் அடைந்து திரும்பி வந்துவிடலாம். எனவே, இந்தியாவின் பொதுப் பாஷை எல்லோராலும் எளிதில் புரிந்து கொள்ளும்படியான தென்று தெள்ளத் தெளிவாய் விளங்குகின்றது.

நமது அருமைப் பிரதமர் ஜவஹர்லால் நேரு, இந்தியாவில் பெரும் பெரும் பொதுக் கூட்டங்களில் ஹிந்துஸ்தானியில் பிரசங்க மாரி பொழிகின்றார். அதைக்கேட்டு இன்புறும் ஒரு பெரும் சமூகம் "ஆஹா, என்ன அருமையான உர்தூவில் பேசுகிறார்" என்று புளகாங் கிதம் அடைகின்றனர். இன்னொரு சாரார், "ஆஹா, என்ன எளிய ஹிந்தி பாஷையில் பேசுகிறார்" என்று இன்பம் எய்துகிறார்கள். நம் ஜவஹர்லால் நெஹ்ரு பேசும் ஹிந்தி (ஹிந்துஸ்தானி) மொழி பாமரர், பண்டிதர், ஹிந்து, முஸ்லிம், சீக்கியர், வடக்கத்தியர், மேற்கத்தியர், தெற்கத்தியர், கிழக்கத்தியர் எல்லாருக்கும் புரிகிறது. இதே விதமாக மற்றும் பல அரிய பெரிய தலைவர்களும், எளிய ஹிந்துஸ்தானியில் அரிய உர்தூவில் பிரசங்கமாரி பொழிந்து, மகா ஜனங்களுக்கும் பெரும் பிரயோஜனம் விளைவிக்கிறார்கள்.

ஆனால், ஒருசில குறுகிய நோக்கங்கொண்ட ஆரியத் தலைவர்கள், சம்ஸ்கிருதத்தை ஹிந்தி என்ற போர்வையில் போர்த்தி பாரத நாட் டில் வியாபிக்கச் செய்துவிட வேண்டுமென்ற பகீரதப் பிரயத்தனம் புரிந்து வருகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு, நம் பிரதமர் ஜவஹர்லால், ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத், கலையமைச்சர் அபுல் கலாம் ஆஜாத் ஆகியோர் பேசும் எளிய பாஷை கொஞ்சமும் பிடிப் பதில்லை. சம்ஸ்கிருதம் மிகுதமாய் கலந்து காடுமுரடான 'ஹிந்தி' பாஷையில் 'பாஷ்யம்' பண்ண வேண்டும், 'லேகக்' செய்ய வேண்டும் (பேச வேண்டும், எழுத வேண்டும்) என்று விதண்டாவாதம் செய் கின்றனர்.

கலப்புக் கலையில் தேர்ச்சிப் பெறு பால்காரன் ஒருவன், அரைப்படி பாலையும் அரைப்படி தண்ணீரையும் வைத்துக் கொண்டு, பாலில் தண்ணீரைக் கலப்பதா-தண்ணீரில் பாலைக் கலப்பதா என்று தவித் துக் கொண்டிருந்தானாம். அதைக்கண்ட 'கலப்புக்கலை'யில் கைதேர்ந்த மற்றவன் "அட, எதிலே எதைக் கலந்தாலென்ன, உனக்கு அரைப் படி'பால்' பணம் லாபந்தானே" என்றானாம்.

இப்படித்தான் இருக்கிறது—ஹிந்தியை சமஸ்கிருதத்தில் கலப் பதா, சமஸ்கிருதத்தை ஹிந்தியில் கலப்பதா என்று இன்று, ஹிந்திப் பிரசாரப் பிரமுகர்கள் பெரும் பிரயத்தனம் புரிந்து வருகிறார்கள். இவர் கள் வசம் பிரசார சௌகர்யம் கிடைத்து விடுவதால், ரேடியோவிலும் சினிமாத் திரையிலும் முற்ற முற்ற 'சமஸ்கிருத—ஹிந்தி'யையே,

ஹிந்துஸ்தானி என்ற பெயரால் திணித்துப் பரத்திவிட முயன்று வருகின்றனர். ஹிந்தி வகுப்பு நடத்தும் பாடசாலை, கலாசாலைகளிலுங் கூட, இதே மனப்பான்மையுள்ள பண்டிட் ஜீக்கள் "மாத்ரு பாஷ்யப் பிரச்சார்" புரிந்து வருகிறார்கள். ஆகையினால்தான் சக்கரவர்த்தி ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் போன்ற பிராம்மணத் தலைவர் கூட, "இப்படிப்பட்ட ஹிந்தி எங்களுக்கு வேண்டாம்; பள்ளிப்பிள்ளை களுக்கு கட்டாய ஹிந்தி திணிப்பு வேண்டாம்; இன்னும் கொஞ்ச காலத்துக்கு ஆங்கிலமே பரிபாஷையாக இருக்கட்டும்; அரசாங்க மொழியும் இதுவாகவே இருந்து போகட்டும்" என்று ஆணித்தரமாய் பேசிப் பிரசாரம் செய்து வருகிறார்.

இந்நிலையில் நம் முஸ்லிம் சமூகத்துக்குப் பொதுவான ஒரு பரி பாஷை எது—என்று நாம் ஆராயவேண்டியது அவசியமன்றோ? உலக முஸ்லிம்கள் எல்லோராலும் ஓதப்படும், உணரப்படும் பொதுப் பாஷை ஒன்றுண்டு. அதுதான் அரபி; திருக்குர்ஆனில் நாம் தினமும் ஓதுகிறோமே, தொழுகையிலும் துஆவிலும் ஓதுகிறோமே அதுதான் அரபி. இந்த நம் அரபி மொழி உலகமெல்லாம் பரவி வருகிறது. அரபியை நாமும் ஓதுகின்றோம். ஆனால் பொருள் உணர்ந்து ஓதினால், இது நம் சமூகத்துக்குரிய பரிபாஷையாக (விசுவமொழி யாக) விளங்கு மென்பதில் ஐயமில்லை.

சோதரீர், அரபி மொழியைப் பொருளுடன் பிள்ளைகளுக்கு கற்பிப்பீர்களாக!

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

1958-வது வருஷத்தின்

ஹமீதிய்யா முஸ்லிம் காலண்டர்

இதில் இங்கிலீஷ், தமிழ், அரபு ஆக மூன்று தேதிகளும் 3 கலர்களில் அச்சிடப்பட்டு ஒரு மாதத்திற்கு ஒரு ஷீட்டாக 12 ஷீட்டுகள் அடங்கியுள்ளன. ஒவ்வொரு ஷீட்டிலும் தொழுகைகளின் நேரங்களாகிய அவ்காதுஸ்ஸலாத்தும் சேர்க்கப்பட்டுள்ளது. இவை சொற்ப காலண்டர்களே அச்சிட்டு வருவதால் ஜனவரி-மீ௳ வருவதற்குள் செலவாகி விடுவது சகஜம். ஆதலால் தங்களுக்குத் தேவையுள்ள காலண்டர்களுக்கு உடனே ஆடர் செய்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஒரு காலண்டர் விலை நயா பைசா. 75

நூறு காலண்டர்கள் விலை ரூ. 60–00

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

மாநிலம் மறக்க முடியாத மாவீரர்

(2)

இச்செய்தித் தாளிலே தமது மார்க்கத்தின் எல்லா ஸ்தலச் செய்திகளையும்—விவாகம் ஜனனம், மரணம், சண்டை, தீவிபத்துகள் முதலிய எல்லா நிகழ்ச்சிகளையும்—அவர் பிரசுரித்தார். ஆரம்பத்தி லிருந்தே அப்பத்திரிகைக்குக் கிராக்கி இருந்தது. விளம்பரங்களையும் அவர் பிரசுரிக்க ஆரம்பித்தார்.

"ஹெரால்ட்" மேலும் கவர்ச்சி அடையச் செய்ய வேண்டு மென்ற நோக்கத்துடன், பத்திரிகையிலே "பால்ப்ரை" என்னும் புனைப்பெயரில் 'ஊர்வம்புப் பகுதி' ஆரம்பித்தார். ஸ்தலப் பிரமுகர் களின் காதல், களியாட்டங்கள், குறைபாடுகள் முதலியவை அப் பகுதியில் இடம் பெற்றன. இவ்விஷயத்திலே அவர் மிகவும் முன் னெச்சரிக்கையாக நடந்து கொண்டார். பிரமுகர்களின் பெயர்களைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக அவர்களது பெயர்களில் காணும் ஆரம்ப எழுத்துக்களை மட்டும் அவர் வெளியிட்டார். அறுபத்து மூன்று மைல் விஸ்தீரணமான ரயில்வே பிரதேசம் மிகக்குறுகிய நிலப்பரப்பே யாகும். எனவே, ஊர்வம்புப் பகுதியை எழுதி வெளியிடும்"பால்ப்ரை" பிரபல்ய மடைந்தார். அவருக்குப் "பாடம்" கற்பிப்பதற்காக அனை வரும் அவரைத் தேடிக் கொண்டிருந்தார்கள். இறுதியாக, செயிண்ட் கிளேர் நதிக்கரையோரமாக நடந்து சென்ற போது "ப்ரை" யைப் பிரஜை யொருவர் கண்டுபிடித்து அவரைக் கீழே வீழ்த்தினர். ஒவ் வொரு ஸ்டேஷனிலும் கோபாவேசம் கொண்ட வாசகர்கள் காத்துக் கொண்டிருந்தார்கள். அவரை நையப் புடைக்க வேண்டு மென்பதே அவர்களது நோக்கம். இந்த எதிர்ப்புகளின் காரணமாக ஆசிரியர் பிரசுரகர்த்தர் ஆகிய தொழில்களைக் கைவிடுவதென அவர் முடிவு செய்தார்.

கையால் இயங்கும் அச்சு இயந்திரம் வைத்து நடத்தி வந்த அதே சமயத்திலே ரசாயன ஆராய்ச்சிக் கூடமும் அமைத்து அவர் பரிசோதனைகள் நடத்தி வந்தார். அச்சு இயந்திரமும் ஆராய்ச்சிக் கூடமும் ரயில் வண்டிப் பெட்டியில் இடம் பெற்று இயங்கி வந்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஒரு நாள் பிற்பகல் கரடு முரடான பாதையிலே செல்லும்போது வண்டி அதிர்ச்சிக்குள்ளாயிற்று. இந்த அதிர்ச்சி, ஆட்டத்தின் காரணமாக எரிபொருள் கொண்ட ஜாடி உடைந்து தரையில் விழுந்தது. பத்திரிகைகளும் தீப்பற்றக் கூடிய இதர சாமான்களும் தீப் பிடித்துக் கொண்டன. ரயில் சிப்பந்திகள் சிரமப்பட்டு தீயை அணைத்த பிறகு ரயில் பாதையும் ரஸ்தாவும்

சந்திக்குமிடத்தில் எடிசனும் அவரது ஆராய்ச்சி சாதனங்களும் இறக்கி விடப்பட்டனர். "கிராண்ட் ட்ரங்க் ரயில்வே" யில் அவரது வாழ்வு இதோடு முற்றுப் பெற்றது.

இந்நிகழ்ச்சியே அவரது வாழ்வில் புதியதொரு அத்தியாய துவக்கமாகவும் இருந்தது. பத்திரிகை விற்பனையாளராக இருந்த போதே, உயிருக்கும் துணிந்து மவுண்ட் க்ளீமன்ஸ் ஸ்டேஷனை அணுகிக் கொண்டிருந்த ரயிலின் பாதையிலிருந்து மூன்று வயதுப் பையனைக் காப்பாற்றியிருந்தார். மவுண்ட் க்ளீமன்ஸில் தந்தி குமாஸ் தாவாக விருந்த அப்பையனின் தந்தை நன்றி மேலீட்டால் எடிஸ னுக்கு தந்திச் செய்தி அனுப்பவும் பெற்றுக் கொள்ளவும் கற்றுக் கொடுக்க முன் வந்தார். தினசரி பதினெட்டு மணிநேரம் வீதம் இளைஞர் தந்தி முறையைப் பயின்று வந்தார்.

டைப்ரைட்டர் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்புள்ள அக்காளில் எல்லாப் பிரதிகளும் கையால் எழுதப்பட்டவைகளாகும். மிகவும் விரைவாகவும் தெளிவாகவும் எழுதும் முறையைக் கண்டு பிடிக்கும் எண்ணத்துடன் பலவிதமான கையெழுத்து முறைகளையும் பரி சோதனை செய்யத் துவங்கினர். கடைசியில் அச்சைப் போன்ற, செங் குத்தான லிபியைக் கண்டுபிடித்தார். பத்திரிகைகளில் உபயோகிக்கப் படும் அச்சு எழுத்துக்களைப் போன்று மிகவும் தெளிவாக அந்த எழுத்துக்கள் இருந்தன. பல மாதங்கள் பழகியதன் பயனாக நிமிடத் துக்கு ஐம்பத்தைந்து வார்த்தைகளைத் தந்தி அடிக்க அவரால் முடிந் தது. வேறு எந்த தந்தி குமாஸ்தாவும் இம்மாதிரி விரைவாக தந்தி அனுப்பியதில்லை.

தந்தி குமாஸ்தாவாகவே எடிசன் மாறிவிட்டார். அவரது அளவு கடந்த ஆர்வம், ஆவல் சூரிய மண்டலத்துக்குக் கீழ்உள்ள ஒவ்வொரு பொருளையும் பற்றிய விஷய ஞானம் பெறவேண்டுமென்ற அவரது விருப்பம் ஆகியவற்றால் எந்த இடத்திலும் அவரால் ஸ்திரமாக வேலை செய்ய முடியாமற் போயிற்று. எங்கெங்கு பிரயாணம் செய்த போதி லும் அங்கெங்கெல்லாம் ரசாயன மின்சார ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தி இரவு முழுவதும்-சூரியோதயம் வரை படித்துக் கொண்டிருந் தார். அயராது ஆராய்ச்சி செய்ததால் அலுப்பும் களைப்பும் ஏற்பட்ட போது சிறிது நேரம் தூங்குவார்.

ஒண்டாரியோவிலுள்ள ஸ்ட்ராட் போர்டில் இரவு நேரத்தில் வேலை செய்ய வேண்டியதாயிற்று. மணிக்கு ஒருதரம் பிரதான காரியாலயத்துக்கு சமிக்ஞை அனுப்பியாக வேண்டும். அவருக்கு அவசியமாகத் தேவைப்பட்ட சிறு துயிலுக்கு இந்த இராக்கால வேலை இடைஞ்சலாக இருந்தமையால் சமிக்ஞை அனுப்புவதற்கென புதிய தொரு உபாயத்தை எடிசன் கண்டு பிடித்தார். குழியுள்ள விளிம்

புடன் கூடிய சிறு சக்கரத்தை கடிகாரத்துடன் இணைத்து, தந்தி சாதனத்துடன் அதற்குத் தொடர்பு ஏற்படுத்தினர். ஒரு மணிக்கு ஒருதடவை சக்கரம் சுழன்றது, சக்கர சுழற்சியின் பயனாகத் தந்திக் கம்பி மூலம் சமிக்ஞை பிரதான காரியாலயத்துக்குச் சென்றது. இந்த ஏற்பாடு சிறிது காலம் சுமுகமாக இயங்கி வந்தது. ஒருநாள் நடுநிசி வேளையிலே எடிசன் தூங்கிக் கொண்டிருந்தார். சமிக்ஞை கிடைத்ததும் டொரண்டோவிலுள்ள பிரதம அதிகாரி அவருடன் தந்தித் தொடர்பு கொள்வதற்கு முயற்சித்தார். எடிசன் தூங்கிக் கொண்டிருந்தமையால் பதில் கொடுக்க முடியாமற் போயிற்று. 'குட்டு' வெளிப்பட்டதும் எடிசனின் வேலைக்கு முற்றுப் புள்ளி வைக்கப் பட்டது.

திறமை மிகுந்த தந்தி குமாஸ்தாவுக்கு வேலை கிடைப்பதா ஒரு பெரிய பிரச்னை? சீக்கிரம் மாதம் நூற்று இருபத்தைந்து டாலர் சம்பளத்தில் எடிசனுக்கு வேலை கிடைத்தது. செவிடராக இருந்தமையால் அவரது திறமை அசாதாரணமானதாக, அபாரமானதாக விருந்தது. கடகட என சப்தம் செய்யும் தந்தி தளவாடங்களின் அசைவைக் கொண்டுதான் அவரால் செய்திகளைக் கேட்டறிந்து கொள்ள முடிந்தது.

பதினெட்டு வயதாவதற்கு முன்பே எடிசன் முழு செவிடரானார். 'கிராண்ட்டிரங் ரயில்வே' யில் பத்திரிகை விற்பனையாளராக இருந்தபோது ஓடும் ரயிலில் அவரை ஏற்றிவிட முயற்சித்த ரயில் கார்டு அவரது காதைப் பிடித்துத் தூக்கி விட்டார். இதன் விளைவாக, அவரது செவி நரம்புகளில் பழுது பார்க்கமுடியாத வகையில் கோளாறு ஏற்பட்டது.

அசட்டை, அசிரத்தையுள்ள தந்தி குமாஸ்தாக்கள் அவரை ஒரு 'பைத்தியம்' என்றே கருதி வந்தனர். எங்கு இருந்த போதிலும் சினிமா தியேட்டருக்குப் போனாலும், விருந்துக்குச் சென்றாலும், அல்லது வேலை செய்து கொண்டிருந்தாலும் அவர் தம்முடன் ஒரு கோட்டுப் புத்தகம் வைத்திருந்தார். பரிசோதனை நடத்துவதற்கான குறிப்புகளையும், படங்களையும் அவர் அதில் குறித்து வைத்துக் கொள்வது வழக்கம். கிழிந்த செருப்பு அணிந்து, மைகறை பட்ட உடைகளை உடுத்தியிருந்த அவர் அவலட்சமான, அருவருப்பு தரும் 'ஹாட்' அணிந்திருந்தார். கடுங் குளிர்காலத்தில்கூட நீண்ட அங்கி (Over Coat) வாங்குவதற்காகப் பணம் செலவு செய்ய மறுத்து விடுவார். அவரது சம்பளப்பணம் முழுவதையும் விஞ்ஞானப் புத்தகங்களும், ஆராய்ச்சி சாதனங்களும், பரிசோதனைக் கருவிகளும் வாங்க செலவிட வேண்டுமென்பதில் அவர் உறுதியாக விருந்தார்.

தந்தி முறையில் அபிவிருத்தி காணவேண்டு மென்பதில் அவருக் கிருந்த அளவிலா அக்கரை அவருக்கு வைரியாக விளங்கியது. ஒரே கம்பியில் ஒரே சமயத்தில் எதிரெதிர் திசையில் இரு செய்திகளை அனுப்புவது பற்றிய குறிப்பு அவரது நோட்டுப் புத்தகத்தில் இடம் பெற்றிருந்தது. மெம்பிஸிலே 'வெஸ்டர்ன் யூனியன் டெலகிராப் கம்பெனி'க்காக வேலை செய்து கொண்டிருந்தபோது ஒருதினம் அவரது எண்ணத்தைக் கம்பெனி தலைவரிடம் விளக்குவதற்கு அவர் முயற்சித்தார். அச்சமயம் அத்தலைவர் ஜெனரல் கோல்மேன் ஆத் திரத்தோடு கூறியதாவது :—"ஒரே கம்பியில் ஒரே சமயத்தில் இரு செய்திகளை அனுப்ப முடியாது என்பது எந்த முட்டாளுக்கும் தெரிந் திருக்க வேண்டும்" பொறுப்பற்ற நபர் என்பதற்காக எடிசனை அவர் 'டிஸ்மிஸ்' செய்து விட்டார்.

பாஸ்டனில் ஒரு வேலைக்கு மனு செய்தபோது தந்தி ஆபரேடர் என்ற முறையில் அவருக்கிருந்த தொழில் நுணுக்க அறிவையும் திறமையையும் அவர் நிரூபித்துக் காட்ட வேண்டியதாயிற்று. வாரி விடப்படாத பிடரிமயிர் அவரது அங்கியைத் தொட்டுக் கொண்டிருப் பதையும், கிழிந்த செருப்பின் வழியாக அதற்குள் இருந்த காலுறை வெளியே தெரிந்து கொண்டிருப்பதையும் பார்த்து, இத்தகைய அவலட்சன நிலையில் இருந்த எடிசனை எளனமாகப் பார்த்து, அவரைக் கடுமையான சோதனைக்குள்ளாக்குவ தென பாஸ்டனி லுள்ள "வெஸ்டர்ன் யூனியன்" ஆபரேட்டர்கள் முடிவு செய்தனர். நியூயார்க்கி லுள்ளவரும் மிக சுறு சுறுப்பாகச் செய்திகளை அனுப்பக் கூடியவருமான ஒரு ஆபரேட்டர் மிகத் துரிதமாகப் பத்திரிகைச் செய்திகளை அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அச்செய்திகளை வாங்குவதற்காக சாய்வு மேஜை மீது எடிசன் உட்கார்ந்ததும் எளனப் பார்வையுடன் அவர்கள் அனைவரும் அவரைச் சூழ்ந்து கொண்டனர். நியூயார்க் ஆபரேட்டர் முதலிலே வழக்கமான முறையில் மெதுவாகச் செய்திகளை அனுப்ப ஆரம்பித்துப் பின்னர் படிப்படியாக வேகத்தை அதிகரித்து நீண்ட வார்த்தைகளைச் சுருக்கிச் செய்திகள் அனுப்பலா னார். தடுமாற்றம் அல்லது தயக்க மின்றிப் பக்கம் பக்கமாக செய்திகளை எடிசன் எழுதிக் கொண்டார். செய்திகளை அப்படியே எடுத்துக் கொண்டதன்றிப் பிழையில்லாமலும் அதை பின்னர் எழுதிக் காட்டி னார். ஒவ்வொரு பக்கமும் அச்சிலிருந்து வெளிவந்தது போன்று மிகத் தெளிவாக இருந்தது. இச்சோதனை நான்கு மணி நேரம் வரை நீடித்தது.

(தொடரும்)

மருத நாயகம் என்ற யூஸூப்கான்

டி. எப். ஆர். மஆலி சாஹிபு (பாகவி)

தமிழ் நாட்டுச் சரித்திர சம்பவம்.

திருநெல்வேலி ஜில்லா சரித்திரப் பிரசித்திப் பெற்ற சீமை. அங்குதான் முஹம்மத் அலி என்ற நவாபும், சந்தா சாஹிபு என்ற அதிபதியும் ஒரு காலத்தில் ஆண்டு கொண்டிருந்தனர். அந்தக் காலத்தில் ஆங்கிலேயர்களும் பிரெஞ்சுக்காரர்களும், வர்த்தகர் வேடத்தில் வந்து இந்தியாவில் இடம் பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது, ஆங்கிலேயர் முஸ்லிம் நவாபு கட்கும், அரசர்கட்கும் வலிய ஏராளமான பணத்தைக் கடன் கொடுத்து விட்டு, அந்தப் பணம் செலவான பின் நிர்ப்பந்தப்படுத்தி வட்டியுடன் திரும்ப வாங்கி வந்தனர். பாபம், நவாபுகளும் அதற்கு இணங்கி, ஜனங்களிடம் வரியும் தண்டமும் வசூலித்துக் கம்பெனி வெள்ளையருக்கு அளித்து வந்தார்கள் என்பதற்கு இங்கு ஒரு சம்பவக்கதை உதாரணம் கூறுவோம்:-

முஹம்மத் யூசுப் கான் வீரம்

ஆங்கிலேயக் கம்பெனியார், நவாப் முஹம்மத் அலியிடம் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டனர். அதன்படி, நவாபுடைய ஆளுகைக்கு உட்பட்ட, மதுரை, திருநெல்வேலிச் சீமைகளுக்கு 'முஹம்மத் யூஸூப்கான்' என்ற தலைவரை அதிபதியாக்கி வைத்தனர். வரிப்பணங்களை வசூல் செய்வது, இராணுவ நடவடிக்கைகளை கவனித்துக் கொள்வது, அடங்காத போக்கிரிகளை அடக்கி வைப்பது ஆகிய வேலைகள் முஹம்மத் யூசுப் கானுக்குரிய பணிகள். இதற்கான சகல அதிகாரங்களும் வசதிகளும் யூசுப்கானுக்கு அளிக்கப்பட்டிருந்தன.

அந்தக் காலத்தில் திருநெல்வேலி, மதுரை ஜில்லாக்களில், வெள்ளையர்களுக்கு எதிர்ப்பு அதிகமிருந்து வந்தது. அந்த நாட்டு வேளாளர்களும் தமிழர்களும் மற்றோரும், வெள்ளையருக்கு அடங்காததலால், முஸ்லிம் வீரர்களைக் கொண்டு அடக்கப்பட்டு வந்தனர். அப்படிப்பட்ட வீரர்களில் முஹம்மத் யூசுப்கான் என்ற முஸ்லிம் வீர அதிபர் குறிப்பிடத் தக்கவராவர்.

மதம் மாறிய மருத நாயகம்.

முஹம்மத் யூசுப்கான் என்ற இவர் யார்? ஆப்கானிலிருந்தோ, வடநாட்டிலிருந்தோ இங்கு வந்து குடியேறியவரல்ல. நம்மைப்போல இவரும் ஒரு தமிழ் மரபைச் சேர்ந்தவர்தான்.

சுமார் 200 வருஷங்களுக்கு முன் வேளாளர் குலத்தில், ஒரு தமிழ் வாலிபன் இருந்து வந்தான். அவன் பெயர் மருதய நாயகம் என்பதாகும்.

அவன், தன் நாட்டில், குடியேறி யிருந்த முஸ்லிம் அதிபர்களுடனும், நவாபுடைய ஆட்களுடனும் நெருங்கிப் பழகி வந்தான். 'வீரத்தை வீரம் மெச்சும்' என்பது போல், முஸ்லிம் வீரர்களுடைய பராக்கிரமச் செயல்களில் பற்று கொண்டு, அவர்களுடன் சேர்ந்து உதவி செய்வான்.,

இப்படியாக, வீரன் மருத நாயகம் முஸ்லிம் களுடன் பழகியதால் அவர்களுடைய இஸ்லாம் மத சம்பிரதாயத்தில் இவனுக்குப் பிரியம் உண்டாய் விட்டது. முஸ்லிம் களுடைய உணவு உடையும், பழக்க வழக்கமும், சகோதரத்துவமும், வீரப்பராக்கிரமும் இவனது உள்ளத்தை ஆக்கிரமிப்பு செய்து கொண்டன.

முஸ்லிமானான் தமிழன்.

எனவே, மருத நாயகம், ஒருநாள் முஸ்லிம்கள் அவையில், மனப்பூர்வமாய் இஸ்லாம் மதத்தை ஏற்றுக் கொண்டு முஸ்லிமானான். அன்று முதல் அவன் பெயர் முஹம்மத் யூசுப்கான் என்றாகி விட்டது.

முஹம்மத் யூசுப்கானுக்கு பிறபாஷைகளும் தெரியும். ஆகவே, நவாபுகளுடனும், இங்கிலிஷ்காரர், பிரெஞ்சுக்காரர், போர்ந்து கீஸியர் முதலியவர்களுடனும் பேசிப் பழகி வந்தான். இவனால் நம் தெற்குச் சீமையில் ஆங்கிலேயக் கம்பெனியர்களின் கை ஓங்கியது அந்தக் காலத்தில்.

உர்தூ ஆஸான்

தமிழ் தெரிந்தவர்கள் ஆசிரியரின்றி 20 நாட்களுக்குள் உர்தூ பாஷையை பேசவும் எழுதவும் படிக்கவும் கற்றுக் கொள்ள ஏதுவான புஸ்தகம் இது ஒன்றே. இன்றே ஒரு உர்தூ ஆஸான் புஸ்தகத்தை வாங்கி இந்தியாவின் முக்கிய பாஷையாகிய உர்துவைக் கற்றுக் கொள்ளுங்கள்.

உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் 256 பக்கங்களில் அச்சிட்டு அழகிய இங்கிலீஷ் கலிகோ பைண்டு செய்யப்பட்டுள்ளது.

இதன் விலை ரூ. 3–00

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

தொழுகை பற்றிய சில ஹதீது ஆதாரங்கள்

((ரஷ்மத் பாகவி))

= வேறு துஆக்கள்: நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமா யிருப்பதாவது:— யாரேனு மொருவர், ஒவ்வொரு பர்லான தொழுகைக்குப் பிறகும், 'ஆயத்துல் குர்ஸீ' யை ஓதிவருவாரானல், மரணத்தைத் தவிர வேருென்றும், அவர் சுவர்க்கத்தில் பிரவேசிப்பதை விட்டும் தடையாக இராது; அதாவது மரணம் அடைந்ததும் அவர் நேரே சுவர்க்கத்துக்குப் போவார் என்பதாகும். 'குல் ஹுவல்லாஹ்' ஸூரா ஓதுகிறவர்களுக்குரிய புண்ணியமும் இதே மாதிரிதான்.

÷ நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமா யிருப்பதாவது:— யாரேனும், ஒவ்வொரு தொழுகைக்கும் பிறகு, 33 விடுத்தம் "ஸுப்ஹானல்லாஹி" இதே மாதிரி 33 விடுத்தம் "அல்ஹம்து லில்லாஹி"வும், 34 விடுத்தம் "அல்லாஹு அக்பர்"வும் ஓதிமுடித்து, மேலும் ஒரு விடுத்தம்,

"லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லஹுல்முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலாகுல்லி ஷையின் கதீர்"

என்று ஓதுவாரானல், அவருடைய சகல பாபங்களும் மன்னிக்கப்பட்டு போகும். அப்பாபங்கள் சமுத்திரத்து நுரை அத்தனை அதிக மிருந்த போதிலும் சரியே.

* மேலும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவுளமா யிருப்பதாவது :—யாரேனுமொருவர் தினந்தோறும் 100 விடுத்தம் 'ஸுப்ஹானல்லாஹி' என்பதை ஓதுவாரானல், அவருடைய புண்ணிய ஏட்டில் தினமும் 100 நன்மைகள் எழுதப்படும்.

† மேலும் திருநபி (ஸல்) அவர்கள் திருவுளமானதாவது :— யாரேனு மொருவர், ஸுப்ஹு தொழுகைக்குப் பிறகு, (வழக்கமாய் கீழ்கண்ட) இந்த துஆவை ஓதிவந்தால், கியாமத்து நாளில், மற்றெல்லோரைவிட அதிகமான நற்பதவியைப் பெறுவார்:—

= பைஹகீ, மிஷ்காத்
÷ முஸ்லிம், மிஷ்காத்
* ஸஹீஹைன் மிஷ்காத்.
† முஸ்லிம், மிஷ்காத்.

துஆ :—ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி அதத கல்கிஹி வரலிய நப்ஸிஹி வஜினத்த அர்ஷிஹி, வமிதாத கலிமாத்திஹி

‡ இன்னும் நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் வழக்கமாக கீழ்க்காணும் இந்த துஆவை அதிகமாக ஓதி வருவார்கள்:-

"ரப்பனு ஆத்தினு பித்துன்யா ஹஸனத்தன் வபில் ஆகிரத்தி ஹஸனத்தன் வகினு அதாபன்னர்"

கருத்து : எங்கள் இரக்ஷகனே, இம்மையில் எங்களுக்கு நன்மையானதையே அளித்தருள். இன்னும் மறுமையிலும் நன்மையானதையே அளித்தருள். மேலும் எங்களை நரக வேதனையிலிருந்து காப்பாற்றியருள்—என்பதாகும்.

‖ இன்னும் நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமா யிருப்பதாவது :—யாரேனு மொருவர் ஸுப்ஹு தொழுகைக்குப் பிறகு சூரியன் நன்ருய் உதயமாகும் வரைக்கும், அஸரு தொழுகைக்குப் பிறகு சூரியன் அஸ்தமனம் ஆகும் வரைக்கும், தொழுத இடத்திலேயே அமர்ந்திருந்து, இறைவனை தியானம் செய்து கொண்டே இருப்பாரானல், அவருக்கு தினந்தோறும் ஹஜ்ரத் நபி இஸ்மாயீல் (அலை) உடைய மக்களிலிருந்து நான்கு அடிமைகளை விடுதலைச் செய்த புண்ணியம் அருளப்படும்.

↑ மேலும் நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமா யிருப்பதாவது :—யாரேனு மொருவர், ஸுப்ஹு தொழுகையை, இமாம் ஜமாஅத்துடன் நிறைவேற்றி முடித்து அதே இடத்தில் உட்கார்ந்திருந்து, இறைவனைத் தியானிப்பதில் ஈடுபட்டிருப்பதோடு அதன் பிறகு, இரண்டு ரக்கஅத்து நபில் தொழுதுக் கொள்வாரானல், அவருக்கு ஒரு முழு ஹஜ்ஜும் உம்ராவும் செய்த (தவாபு) புண்ணியம் கிடைக்கும்......இவ்வாறு மூன்று விடுத்தம் மீண்டும் சொன்னர்கள்.

சுருங்கக் கூறுமிடத்து, தொழுகைகளுக்குப் பிறகு எல்லாம் வல்ல இறைவனுகிய அல்லாஹு தஆலாவினிடம், இஷ்டப்பட்ட வண்ணம் துஆகேட்டுப் பிரார்த்திக்கலாம்.

= "பர்லு தொழுகைக்குப் பிறகு கேட்கும் துஆ அதிகமாக கபூல் ஆகிறது" என்று நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமா யிருக்கிருர்கள்.

---

‡ புகாரி.
‖ அபூதாவூத், மிஷ்காத்.
↑ திர்மிதி, மிஷ்காத்.
= அபூதாவூத்.

÷ "நீங்கள் இறைவனிடம் துஆ கேட்பீர்களாயின், இரு கரங் களின் உள்ளங் கைகளைக் கொண்டு கேளுங்கள்; பிறகு அதை முகத் தில் துடைத்துக் கொள்ளுங்கள்" என்று நபிகள் நாயகம் ரஸூலுல் லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமா யிருக்கிறார்கள்.

|| "இறைவனுடைய அடியான் துஆ கேட்பதற்காக கையேந்திக் கொண்டால், பிறகு அந்தக் கை வெறுங் கையாக போய்விடக் கூடாதே என்ற விஷயமாய், இறைவன் வெட்கப்படுகிறான். (அதாவது அந்த துஆவை அவசியம் கபூல் செய்கிறான்") என்று, நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமானார்கள்.

துஆ கேட்கும்போது, இரண்டு கரங்களையும் உயர்த்த வேண்டி யதும், இரு கரங்களின் உள்ளங் கைகளை முகம் நோக்கி வைத்துக் கொள்ள வேண்டியதும், துஆ ஓதி முடிந்ததும் உள்ளங்கைகளை முகத்தில் தடவிக் கொள்வதும் ஸுன்னத்தான காரியமாகும்.

× இன்னும் ஹதீதில் அறிவிக்கப் பட்டிருப்பதாவது :—துஆ கேட்கும்போது கரங்களின் உள்ளங்கைப் பகுதிகளை முகம்நோக்கி வைத்துக் கொள்ள வேண்டும்; மேல் பக்கத்தை முகம் நோக்கி வைத் துக் கொள்ளக் கூடாது; (அதாவது, கை குப்புற வைத்துக் கொண்டு துஆ கேட்கக் கூடாது).

+ ஆனால் மழைக்காக பிரார்த்திக்கும் இஸ்திஸ்கா துஆவின் போது மட்டும், கைகளை குப்புற திருப்பி வைத்துக் கொள்ள வேண் டும்; (உள்ளங் கைகளை மேல் நோக்கி வைத்துக் கொள்ளக் கூடாது.)

() பர்ல் தொழுகைகளுக்குப் பிறகு, கைகளை உயர்த்தி துஆ கேட்பது (ஜாயிஸ்) நன்மையாகும்.

நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமா யிருப்பதாவது :—ஒவ்வொரு தொழுகையும் இரண்டிரண்டு ரக்கஅத்து களை யுடையதாகும். ஒவ்வொரு இரு ரக்கஅத்துக்கு இறுதியில் 'அத்தஹிய்யாத்' உண்டு. இது, அடியான் தன் தாழ்மையையும் ஏழ்மையையும் இறைவனிடம் பகிரங்கப் படுத்துவதாகும். எனவே, பிறகு இரு கரங்களின் உள்ளங் கைகளையும் உயர்த்தி பிரார்த்திப் பானாக. அந்த சமயத்தில் "ஏ என்னுடைய ரக்ஷகனே! என்னுடைய ரப்பே" என்று அடியான் சொல்லுவானாக. யாரேனுமோர் அடியான், இங்ஙனம் தாழ்மையை தெரிவித்துச் செய்யவில்லை யாயின், அவ னுடைய தொழுகை குறையுள்ளதாகவும், பூர்த்தி யற்றதாகவும் இருக்கும்.

÷ அபூதாவூத், மிஷ்காத்.
|| திர்மிதி, அபூதாவூத், பைஹகீ, மிஷ்காத்.
× அபூதாவூத், மிஷ்காத்.
+ முஸ்லிம்.
() ஜாமிஃ ஸகீர்.

இதெல்லாம் எல்லோருக்கும் தெரிந்த பொதுவான ஆதாரங்களாகும். ஆகையால், ஒவ்வொரு தொழுகைக்குப் பிறகும், கரங்களை ஏந்தி, இஷ்டப்பட்டதைக் கொண்டு இறைவனிடம் பிரார்த்தனை செய்ய வேண்டும். இது ஆகுமானதும் நேர்மையானது மாகும்.

[ ] நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் துஆ கேட்கும்போது, தங்கள் திருக் கரங்களை எம்மட்டும் உயர்த்துவார்கள் என்றால், அவர்களது அக்குளின் வெண்மை நிறம் பின்னாலிருப்பவர்களுக்குத் தெரியவரும்.

† "எவன் (தாழ்மையாய்) துஆ கேட்பதில்லையோ அவன் மீது ஆண்டவன் கோபப்படுகின்றான்" என்றும், "துஆ கேட்பது (ஒரு வகை) வணக்கமாகும்" என்றும் நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமா யிருக்கிறார்கள்.

இமாமத்துடைய விஷயம்

நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமா யிருப்பதாவது:-

> ‡ மூன்று பேர்கள் இருந்தால் அவர்களில் ஒருவர் மூவருக்கும் இமாமத்து செய்வாராக. இமாமத்து செய்வதற்கு அவர்களில் அதிக தகுதி (ஹக்) உடையவர் யாரெனில், கிராஅத்தை நன்றாக ஓதக் கூடியவரே யாவார்.

+ இன்னொரு ரிவாயத்து (ஹதீதும்) கவனிக்கத்தக்க தாகும். அதாவது:-நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமா யிருப்பதாவது:- ஒரு கூட்டத்துக்கு இமாமாக இருக்கத் தகுதியானவர் (யாரெனின்), அவர்க ளெல்லோரிலும் நன்றாக (இனிமையாக) குர்ஆனை ஓதக் கூடியவரேயாவர். எனவே குர்ஆனை ஓதுவதில் அவர்க ளெல்லோருமே சமமானவர்களாயிருந்தால், யார் அவர்களில் (நபியின்) ஸுன்னத்தை அதிகம் அறிந்துணர்ந்தவராக யிருக்கின்றாரோ அவராவர். எனவே, குர்ஆனை ஓதுவதிலும் ஸுன்னத்தைப் பேணுவதிலும் எல்லோருமே சமமானவர்களா யிருந்தால், அவர்களில் யார் முதலில் ஹிஜ்ரத் செய்தவராக யிருக்கின்றாரோ அவரே இமாமாக இருப்பதற்கு அதிகம் தகுதியுடையவராவர். இத்தனை விஷயங்களிலுமே எல்லோரும் சமமானவர்களாக யிருந்தால், அவர்களில் யார்

[ ] பைஹகீ, மிஷ்காத்.

† திர்மிதி, மிஷ்காத், மஸ்னத் இமாம் அஹ்மத், திர்மிதி, அபூதாவூத், நஸாயீ, மிஷ்காத்.

‡ முஸ்லிம்.

+ முஸ்லிம்.

அதிக வயதுடைய (பெரிய) வராய் இருக்கின்றாரோ அவரே தகுதி யுடையவர்.

* ஜமாஅத்தாக தொழுவதற்கு, குறைந்த பக்ஷம் இரண்டுபேர் களாவது இருக்க வேண்டியது அவசியம். எனவே, ஒருவர் இமாமாக வும் மற்றவர் முக்ததியாகவும் இருந்து ஜமாஅத்தாகவே தொழுதுக் கொள்ளலாம். இது நிறைவேறிவிடும்.

|| கண்குருடான மனிதரை இமாமாகச் செய்து அவர் பின்னால் தொழுதுக் கொள்வது ஆகுமான கருமமேயாகும். உதாரணமாக: நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், அப்துல்லாஹ் இப்னு உம்ம மக்தூம் (ரலி) என்பவரை, தங்களுக்குப் பதில் ஓர் இமாமாக நியமித்திருந்தார்கள். எனினும் அன்னவர் கண்குருட ராகவே இருந்தார்.

↑ வேறொரு (மஹல்லா) மஸ்ஜிதில் (போய்) அங்குள்ள இமாம் ஸாஹிபுடைய உத்தரவு பெறாமல், இமாமத்துச் செய்வது கூடாது.

† நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமா யிருப்பதாவது:—மூன்று பேர்களுடைய தொழுகை (எப்போதுமே) நிறைவேறுவதில்லை. அவர்களில் 1-வது, ஒரு சமூகத்துக்கு (ஜமா அத்துக்கு) இமாமாக யிருந்தும், ஜனங்கள் அவரைப் பற்றி திருப்தி யாக இருக்க மாட்டார்கள். 2-வது தன்னுடைய கணவனை அதிருப்தி யாக வைத்திருக்கும் மனைவி. 3-வது தங்களுக்குள் விரோதம் பாராட்டிக் கொண்டிருக்கும் இரண்டு முஸ்லிம் சகோதரர்கள்; மூன்று நாட்களாக பரஸ்பரம் ஸலாம் செய்து கொள்ளாமல் விலகியிருந்தா லும் அது விரோதமே யாகும்.

÷ இமாம் ஸாஹிப் பர்லான தொழுகை நிறைவேற்றிய இடத் திலேயே ஸுன்னத்து முதலியன தொழுதுக் கொள்ள வேண்டாம். (வேறு இடம் மாறி தொழுவது நன்மை.)

வாலிபர்களும், பெரிய வயதினர்களும் இருக்க, பருவ வயது வராத (நாபாலிக்) சிறுவனை இமாமாக்கித் தொழுதுக் கொள்வது (ஜாயிஸ்) ஆகும்; ஆனால் அந்தப் பிள்ளையாண்டான், குர்ஆன் ஷரீபை நன்றாக (திருத்தமாக) ஓதத் திறமையுடையவராக இருக்க வேண்டும்.

(தொடரும்)

---

* இப்னு மாஜா.
|| அபூதாவூத்.
↑ முஸ்லிம்.
† இப்னு மாஜா.
÷ புகாரி, மிஷ்காத்.

(33-வது பகுதி)

திருக் குர்ஆன் : : : : : : : : சார சங்கிரஹம்

பல விஷயங்கள் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஷ்மத் பாகவி)

இப்ராஹீம் நபியின் வேண்டுகோள்

(நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் பின் வருமாறு பிரார்த்தனை செய்து இறைவனைப் போற்றினார்கள்:—)

"ஏ எங்கள் இரக்ஷகனே, நாங்கள் மறைத்துச் செய்கிற (விஷயத்)தையும், நாங்கள் வெளிப் படுத்திச் செய்கிற (விஷயத்)தையும் நீ நன்கு அறிகிறவனாக இருக்கின்றாய். வானத்திலும் பூமியிலும், நீ அறியாத வஸ்து ஏதொன்றுங் கிடையாது.

(அப்படிப்பட்ட) அல்லாஹ்வுக்கு (மிகவும்) நன்றி உரித்தாகுக. அவனே எனக்கு, எனது விருத்தியாப்பியத்திலும் (புத்திர சந்தானமாக) இஸ்மாயீலையும், இஸ்ஹாக்கையும் (இரு குமாரர்களை) அருள் புரிந்தான். என்னுடைய இரக்ஷகன், (சகல அடியார்களின்) பிரார்த்தனைகளைக் கேட்டு (ஏற்று)க் கொள்கிறான் என்பதில் சந்தேகம் இல்லை. (எனவே) ஏ என் இரக்ஷகனே! (இறுதித் தீர்ப்பு) கணக்கு நாள் வரும் போது, நீ என்னையும், என் (இரு) பெற்றோர்களையும், மற்றும் எல்லா (மூமினான) பக்தர்களையும் மன்னித்து அருள்புரிவாயாக.

(ஜுஸு: வமா உபர்ரிவு: ஸூரா: இப்ராஹீம்; ருகூ: 6)

ஒவ்வொரு கூட்டத்துக்கும் ஒரு நபி உண்டு

(இறைவனாகிய)யாம் ஒவ்வொரு கூட்டத்தாருக்கும் (உம்மத்துக்கும்) ஒவ்வொரு நபியை அனுப்பி வைத்தோம்; அவர்கள் (ஜனங்களிடம் போய்) "ஏக இறைவனையே வணங்குங்கள்; ஷைத்தானுடைய சூழ்ச்சிகளில் சிக்கி விடாதீர்கள்" என்று உபதேசம் செய்தார்கள். (இங்ஙனம் எல்லோருக்குமே நன்மார்க்கம் அருளப்பட்டது.) ஆயினும் சிலருக்கு ஆண்டவன் சன்மார்க்கப் பாக்யமளித்தான்; சிலரை, வழி கேட்டிலேயே சிக்கிக் கிடக்க விட்டு விட்டான். (ஏ மனிதர்களே) பூலோகத்தில் சுற்றித் திரிந்து பாருங்கள்; பொய்யர்களின் முடிவு காலம் எப்படி ஆயிற்றென்று தெரிந்து கொள்ளுங்கள்.
(ஜுஸு: ருபமா; ஸூரா: நஹல்; ருகூ: 5)

ஆண்டவனின் கயிற்றைப் பற்றிப் பிடியுங்கள்

(முஸ்லிம்களே,) நீங்களெல்லோரும் (சேர்ந்து) ஆண்டவனின் கயிற்றை (ஐக்கியத்தை) பற்றிப் பிடியுங்கள்; (ஜனங்களுக்குள்) பிரிவினையை உண்டாக்காதீர்கள்; உங்கள் மீது ஆண்டவன் புரிந்த அருட் கொடைகளை எண்ணி (எண்ணிப்) பாருங்கள்; (அதாவது) நீங்கள் ஒருவர்க்கொருவர் (குப்ரியத்தில்) பகைவர்களாய் இருந்தீர்கள்; பிறகு அவன் உங்கள் ஹிருதயங்களில் அன்பை உண்டாக்கிவைத்தான். எனவே நீங்கள் (இஸ்லாத்தில்) அன்புமிகுந்த சகோதரர்களாய் விட்டீர்கள். (ஜுஸ்உ: லன்தனு; ஸூரா: ஆலஇம்ரான்; ருகூ: 11)

நல்ல பெண்கள் நல்ல புருஷர்க்கே உரியவர்.

ஒழுக்கங் கெட்ட பெண்டிர், ஒழுக்கங்கெட்ட ஆடவர்க்கே உரியவர்; ஒழுக்கங் கெட்ட ஆடவர், ஒழுக்கங் கெட்ட பெண்கட்கே உரித்தானவர். அபவாதம் (பழி) சுமத்துபவர் (ஒழுக்கமுள்ள நல் பெண்களைப்பற்றி) பிதற்றித் திரிகின்றனரே, (அதுபொய்); இவர்கள் அவ்வபதாங்களை விட்டும் தூய்மையானவர்கள். இவர்கட்கு (மறுமை வாழ்வில்) மன்னிப்புக்குரிய அறுதிமானம் உண்டு; இன்னும் (இவ்வுலக வாழ்வில்) கௌரவமான ஜீவனமும் உண்டு.
(ஜுஸ்உ: கத் அப்லஹ; ஸூரா: நூர்; ருகூ: 3)

பரிசுத்தமான வாழ்வு மேற் கொள்ளுங்கள்.

(ஏ நபியே) முஸ்லிம்களை நோக்கி (இவ்வாறு) கூறி விடுவீராக: (ஏ முஸ்லிம் ஆண்-பெண்களே!) நீங்கள் உங்கள் பார்வைகளை கீழே தாழ்த்திச் செல்வீர்களாக; இன்னும் உங்கள் மர்மஸ்தானங்களை (பாப காரியங்களை விட்டும்) காப்பாற்றிக் கொள்வீர்களாக. இதில் (பொது ஜனங்களாகிய) அவர்களுக்கு பரிசுத்த வாழ்வு இருக்கிறது. (ஜனங்கள்) செய்வனவற்றை யெல்லாம், அல்லாஹ் (தஆலா) நன்கறிகின்றான். (ஜுஸ்உ: கத்அப்லஹ; ஸூரா: நூர்; ருகூ: 4)

நல்லோர்க்கு சுவர்க்கத்தில் மதுவும் மாதும் உண்டு.

மேலும், சந்தேகமின்றி, நல்லொழுக்கஸ்தர்கட்கு (உலகில் சுக போக மில்லாவிடினும் மறுமையில் நல்ல) சுகஸ்தலம் உண்டு; சதா சர்வகாலம் வசிப்பதற்கு (சுவர்க்கத்து) உத்தியானவன முண்டு; அதன் வாயில்கள் எப்போதும் அவர்கட்காக திறந்து வைக்கப்பட்டிருக்கும். (அங்கு) அவர்கள் திண்டுகளில் (சுகமாக) சாய்ந்து உட்கார்ந்திருப்பார்கள். (வேண்டிய மட்டும்) கனிவகைகளும் (போதை யில்லா) மது வகைகளும் பெற்றுக் கொள்ளுவார்கள். அவர்களது அருகில்,

(காணத்தால்) பார்வை தாழ்ந்தவர்களான, தக்க வயதினரான (அப்ஸர) மாதுகளும் (பணி விடைக்கு காத்துக் கொண்டு) இருப்பர்; இறுதி நாளில் கிடைக்கு மென (இறைவனால்) வாக்களிக்கப்பட்ட (சுகபோக) பாக்கியங்கள் இவைகளாகும்.

(ஜுஸு: வமாலிய; ஸூரா: ஸாத்; ருகூ: 4)

மரணமே இல்லாத இன்ப வாழ்வு அங்கு உண்டு.

சந்தேகமே இன்றி, நல்லொழுக்கஸ்தர்கள், (மறுமையில்) அமைதியான தலத்தில், சுவர்க்கத்து உத்தியான வனங்களில், இருப்பர்; அங்கு நீர் ஓடைகள் உண்டு. (சுவர்க்க வாசிகள்) மென்மையான வழுவழுப்பான பீதாம்பரம் அணிந்துகொண்டு, ஒருவரையொருவர் எதிரெதிரே பார்த்த வண்ணம் அமர்ந்திருப்பார்கள். (அவர்களுக்குரியவை) இந்த (அரிய) பாக்கியங்களாகும்; இஃதன்றி ஆங்கு, சிகப்பு நிறம் உடைய பெரிய பெரிய (அழகிய) கண்களையுடைய (அப்ஸரப்) பெண்களை, யாம் அவர்கட்கு கலியாணம் செய்து வைப்போம். அங்கு எல்லா வகையான (இனிய) கனிவர்க்கங்களையும் அவர்கள், நிம்மதியாக பெற்றுக் கொள்வர்; (உண்டு மகிழ்வர்;) மேலும், (உலகில் நிகழ்ந்த) முதல் மரணத்தைத் தவிர அங்கு, அவர்கள் (கசப்பான) மரணத்தை சுவைக்கவே மாட்டார்கள்; (அதாவது அவர்கள் சுவர்க்கத்தில் சதா சிரஞ்சீவியாக இருப்பார்கள்.) அவர்களை இறைவன் நரக வேதனைகளை விட்டும் (முற்றும்) காப்பாற்றிக் கொள்வான். (எ நபியே) இதெல்லாம், இறைவன், அவர்கள் மீது புரியும் மகத்தான அருட்கொடையாகும், இதுவே அவர்களது (உலக வாழ்வின்) மகா வெற்றியுமாகும்: (ஜுஸு இலைஹியுரத்து; ஸூரா: துக்கான்; ருகூ:3)

நல்லவனே உங்களில் மகா யோக்கியன் ஆவான்.

ஜனங்களே, (இறைவனாகிய) யாம் உங்களை யெல்லாம் (ஆதி பிதா ஆதம், ஆதி மாதா ஹவ்வா ஆகிய) ஒரே ஆண்—ஒரே பெண்ணிலிருந்து உண்டாக்கி (பரத்தி) வைத்தோம்; பிறகு உங்கள் குலங் கோத்திரங்களை உண்டாக்கிக் கொண்டீர்கள்; இதனால் நீங்கள், உங்களை ஒருவர்க் கொருவர் (இனம் பிரித்துத்) தெரிந்து கொள்கிறீர்கள். எனினும் உங்களில், எவர் எல்லோரினும் மிக ஒழுக்கஸ்தராக இருக்கிறாரோ அவரே உங்களில் (யோக்கியனும்) பயபக்தியுள்ளவனும் ஆவான். சந்தேக மின்றி, அல்லாஹ் (தஆலா) மகா அறிஞனாக இருக்கின்றான். (உலகப் புகழ் செல்வத்தினால் ஒருவன் யோக்கியனாய் விட முடியாது.)

(ஜுஸு, ஹாமீம்; ஸூரா: ஹுஜ்ரத்;ருகூ 2) (தொடரும்)

சிறைப் பறவை சிப்கத்துல்லா
அல்லது
துப்பு துலக்கிய தூயவர்.

14-வது அத்தியாயம்.

தனித் தனியான விருந்து அறைகளின் கதவுகளும் சுவர்களும் சப்தம் கேட்காத முறையில் அமைக்திருந்தன. துப்பாக்கி சுடுதலைத் தொடர்ந்து சந்தடி எதுவும் கேட்க வில்லை. வெளி மண்டபத்தில் பணியாள் தலையையுயர்த்தி செவி சாய்த்தான்.

"அது என்ன சப்தம்?" காத்துக் கொண்டிருந்த "லிப்ட்" சிப்பந்தியை அவன் வினவினான்.

"எந்த சப்தத்தையும் கேட்க வில்லை." மற்றவன் இரத்தின சுருக்கமாகச் சொன்னான். "யாரோ கதவைத் தாழிட்டிருக்கிறார்கள்."

"இருக்கலாம்" இவ்வாறு இயம்பி விட்டு பணியாள் புத்தகத்தை எடுத்தான். அன்றிரவு வந்து சென்றவர்களின் பெயர்களைப் பதிவு செய்து கொண்டிருந்தான். பென்ஸிலைக் கொண்டுதான் அவன் எழுதிக் கொண்டிருந்தான். ஏனெனில் தமது வருகை பற்றிய அடையாளம் அல்லது அத்தாக்ஷியை உடனே அகற்றி விடவேண்டுமெனவும் கிளப் அங்கத்தினர்கள் விரும்புவதுண்டு.

எட்டாம் எண்ணுள்ள அறையில் அமைதி நிலவியது. கதவு சிறிது திறந்து கொண்டது. வலது கரத்தைக் கோட்டு ஜேபிக்குள் விட்ட வண்ணம் சிப்கத்துல்லா உள்ளே சென்றார்.

சவம் போல காதர்கான் விழுந்து கிடந்த ஸ்தலத்துக்குச் சென்று குனிந்து அந்த உடலைப் புரட்டிப் பார்த்தார். சிறிது நேர சோதனைக்குப் பிறகு அவனது சட்டைப் பைக்குள் அவர் துரிதமாகக் கை விட்டார். ஏதோ வொன்றைக் கண்டெடுத்து வெளிச்சத்தில் கொண்டு போய்ப் பார்த்து, முகத்தைச் சுளித்த வண்ணம் தமது சட்டப் பைக்குள் திணித்துக் கொண்டார். அது ஒரு காகிதம். வெளியே வந்து ஜாக்கிரதையாகக் கதவை மூடி விட்டு மண்டபத்துக்கு வந்தார்.

"தங்கி யிருக்க வில்லையா, காப்டன் சாஹிப்," பணியாள் வியப்புடன் வினவினான்.

"இல்லை; எனக்குத் தெரிந்த எவரும் இங்கு இல்லை. அங்கத்தினர்கள் மாறிக் கொண்டிருப்பது வினோதமாக விருக்கிறது"

வினுக்களை விடுத்து அசௌகரியம் விளைவிக்கும் அற்ப புத்தி யுள்ள வனல்ல அவன்.

"என்னை மன்னிக்க வேண்டும்," சிப்கத்துல்லாவை நெருங்கிக் குனிந்து பார்த்து அவன் சொன்னுன், "உங்கள் சட்டக் கைப் பட்டையில் சிறிது இரத்தக் கறை காணப் படுகிறது."

கைக் குட்டையை எடுத்து அந்தக் கறை போகும் படி அவன் சுத்தமாகத் துடைத்தான். கண்களைச் சிமிட்டிக் கொண்டே அவன் வினவினுன்:

"ஏதாவது தவறு நேர்ந்து விட்டதா?"

"உன்னிடம் நான் சொல்லக் கூடியது ஒன்று மில்லை." என்று இயம்பி விட்டு சிப்கத்துல்லா அவ்விடத்தை விட்டு அகன்ருர்.

"லிப்ட்" கீழே இறங்கு வதையும் கீழே வெளிக் கதவு திறக்கப் பெறும் ஓசையையும் கேட்ட வண்ணம் மேஜைக் கருகில் அவன் நின்று கொண்டிருந்தான். மறுபடியும் "லிப்ட்" மேலே வந்ததும், "நீ இங்கேயே இரு. மறுபடியும் நான் திரும்பி வரும் வரை யார் மணி அடித்தாலும் கீழே செல்லாதே" என்று "லிப்ட்" சிப்பந்தியிடம் கூறி விட்டு அவன் சென்ருன்.

நடை முற்றத்தின் வழியாக எட்டாம் எண்ணுள்ள அறைக்கு அவன் விரைந்தான். கதவைத் தட்டினுன்; பதில் எதுவும் இல்லை. கைப் பிடியைத் திருகினுன்; ஒரு வினுடி உள்ளே எட்டிப் பார்த்ததும் தெரிய வேண்டு வனவெல்லா வற்றையும் தெரிந்து கொண்டான். மெது வாகக் கதவை மூடி விட்டு தனது மேஜை மீதிருந்த டெலிபோனிடம் விரைந்து சென்ருன்.

ரிஸீவரைக் கையிலெடுக்கு முன்பு, வேர்க்க வியர்க்க நின்று கொண்டிருந்த "லிப்ட்" சிப்பந்தியை விளித்து "எல்லா அறைகளுக்கும் ஓடிச் சென்று கொலை நிகழ்ந்திருப்பதாகத் தெரிவித்து எல்லோரையும் வெளியே அழைத்து வா" என்ருன்.

வியர்வையால் நனைந்த கைகளில் டெலிபோனை அவன் பிடித்துக் கொண்டிருக்கும் பொழுதே பீதியுற்ற கடைசி விருந்தாளியும் "லிப்டு"க்கு வந்து விட்டார்.

"கிளப் இன்ஸானியத்திலிருந்து பேசுகிறேன். இளம்பிறை ஆஸ்பத்திரியிலிருந்து தானே நீங்கள் பேசுகிறீர்கள்?.......இங்கு ஒரு அம்புலன்ஸ் கொண்டு வாருங்கள்...இங்கு விபத்து நேர்ந்துள்ளது."

வேறொரு நம்பரைஅழைத்து அவன்பேசினன். "கிளப் இன்ஸானியத் பேசுவது. போலீஸ் ஸ்டேஷனிலிருந்து நீங்கள் பேசுகிறீர்களா?......கிளப் இன்ஸானியத்தின் பணியாள் பேசுகிறேன்....எங்கள் அங்கத்தினர்களிலொருவர் தற்கொலை புரிந்து கொண்டு விட்டார்."

ரிஸீவரைக் கீழே வைத்து விட்டு, பீதியுடன் பிரமித்து நின்றிருந்த "லிப்ட்" சிப்பந்தியை நோக்கினன். அந்த கோடியில் கவலையுடன் மற்ற தொழிலாளர்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

"பெஞ்சமின், சிப்கத்துல்லா இன்றிரவு இங்கு இருக்க வில்லை. ஆம், இன்றிரவு இங்கு இருக்க வில்லை. புரிந்ததா?" அவன் அழுத்தந்திருத்தமாகச் சொன்னன்.

மேஜை மீது விருந்தாளிகளின் பதிவுப் புத்தகம் திறந்து கிடந்தது. சிப்கத்துல்லாவின் பெயர் இருக்க வேண்டிய இடத்தில் "சிறு காவேரி பாக்கம், சின்ன தம்பி மரைக்காயர்" என்று பென்ஸிலால் எழுதினன்.

(தொடரும்)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் குர்ஆனின் நல்லுபதேசமும்.

(முதல் பதிப்பு)

இதில் நமது நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவதரித்தது முதல் வபாத்து வரை சுருக்கமாக விபரித்து எழுதப்பட்டுள்ளது. இத்துடன் நாயகம் (ஸல்) அவர்கள் தமது உம்மத்துமார்களுக்கு மொழிந்தருளிய உபதேசங்களும், குவலயத்தோர்க்கு குர்ஆன் ஷரீப் கூறும் செய்திகளுள் சிலதும் சேர்க்கப்பட்டுள்ளன. 115 பக்கங்கள் கொண்டது. விலை ரூ. 1 – 00

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்.
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ், 5.

187669

முஸ்லிம் மன்னரின் :: :: ஹிந்து ராணிகள்

டி. எப். ஆர். மஆலி சாஹிப் (பாகவி)

(2)

பாயி பஹவத்–தாயி

ஆலம் கீர் பாதுஷா அவரங்கஜேபுடைய குமாரர்களில் ஒருவர் பெயர் ஷாஹ்ஜாதா முஹம்மத் சுல்தான் என்பதாகும். இவருக்கு வாழ்க்கைத் துணைவியாகவும் ஹிருதய ராணியாகவும் வாய்த்தவளே "பாயி பஹவத் தாயி" என்ற பெண்மணியாவள். இவள், கஷ்தூர் ராஜாவுடைய ஏக புதல்வி.

இவளது தந்தை, குமாரியை சுதந்தரமாகவும் செல்வமாகவும் வளர்த்து வந்தார். குமாரி பாயி பஹ்வத்தாயி, உலக ஆராய்ச்சியுடைய வள். அரசாங்க விஷயங்களிலும் ராஜாக்களுடைய கடமாட்டங்களி லும் சிந்தனை செலுத்துபவள். இவள், இஸ்லாமியச் சரித்திரங்களை யும், முஸ்லிம்களின் கலாசாரங்களையும், சுல்தான்களுடைய வரலாறு களையும் ஆராய்ந்து வந்தாள். முஸ்லிம்கள் சரித்திரபூர்வமாய் எந்தெந் தத்துறையில் முன்னேறி வந்தனர், அவர்களுக்கு எந்த வகையில் வெற்றிகள் கிடைத்தன என்ற விபரங்களையும் ஆராய்ந்து வருவாள்.

பொது ஆராய்ச்சிப் பெண்

பொதுவாக ஒரு மதத்தினர், இன்னொரு மதத்தினரின் வெற்றிச் செயல்களை ஆராய்ந்தறியுங்கால் பொறுமையாவது வெறுப்பாவது ஏற்படும். ஏனெனின் அக்காலே, முஸ்லிம் மன்னர்கள் இந்தியா மீது படையெடுத்து வந்ததையும், அவர்கள் இந்நாட்டில் ஆதிக்கங் கொண்டு, அரசாக்கினை புரிந்ததையும் கண்டு, பொதுவாக ஹிந்துக் களும் குறிப்பாக மராட்டியர்கள், ராணுக்கள், சிற்றரசர்கள், ஜமீன் தார்கள் விரோதம் பாராட்டி, குரோதங் காட்டி வந்தனர்.

ராஜா கஷ்தூருடைய மகள் ராணி பாயி பஹ்வத்தாயி அப்படிப் பட்ட குரோத மனப்பான்மை கொள்ளவில்லை. அறிவை அறிவு மெச்சும், வீரத்தை வீரம் போற்றும் என்பதுபோல, அந்த சுந்தர ராணி, முஸ்லிம் மன்னர்களின் வீரப்பராக்கிரமத்தையும் அறிவு ஆற் றலையும் மெச்சிப் பாராட்டி வந்தனள். எனவே, முஸ்லிம் மன்னர் களிடம் அவளுக்கு ஒரு அபிமானம் உண்டாயிற்று.

காதலர் சந்திப்பு

இளவரசர் முஹம்மத் சுல்தான், ராணி பாயியை எப்படி மனைவியாக அடைந்தார் என்பதற்கு சரித்திரப் புத்தகங்களில் விபரம் காணப்படவில்லை. ஆனல், இருவரும் சந்தித்து, காதல் கொண்டு நெருங்கிய பின் முறைப்படி திருமணம் புரிந்து கொண்டனர் என்றே தெரிய வருகிறது.

ராணி பாயி பஹவத்தாயி, ஏதோ பெரிய இலக்ஷியங்களை மனதில் கொண்டிருந்ததால், அவள் மங்கைப் பருவம் அடைந்த பின்னர் பல வருஷங்கள் வரை, கலியாணத்துக்கு சம்மதிக்காமலே இருந்துவந்தாள். முதலில் அவள் தந்தை, தக்க வரனைத் தேடிய பின், மணந்து கொள்ளும்படி அவளை வற்புறுத்தினர். "இப்போது எனக்குத் திருமணம் வேண்டாம்" என்று ஒரே பிடிவாதமாய் கூறிவந்தமையால், அவளை அவளது தந்தை திருமணத்துக்காக வற்புறுத்துவதை விட்டுவிட்டார்.

ராணி பாயி பஹ்வத்தும் இளவரசர் முஹம்மத் சுல்தானும் முதன் முதல் எங்கே சந்தித்தனர் என்பது தெரியவில்லை. முஸ்லிம் மன்னர்கள் தாங்கள் போரிட்டு பிடித்த ஊர்களில், பின்னர் பிரவேசித்து பிரஜைகளுடன் பழகுவார்கள்; நல்லவர்களையும் அபிமான முள்ளவர்களையும் ஆதரிப்பார்கள். முரண்டு எதிர்ப்பும் சூழ்ச்சியும் துரோகமும் புரிபவர்களைத் தண்டிப்பார்கள்.

இங்ஙனம் முஹம்மத் சுல்தானும், ராஜா கஷ்தூருடைய ஊருக்குள் பிரவேசித்தபோது, ராணிபாயை சந்தித்திருக்க வேண்டுமென்று அறியப்படுகிறது. ஆயினும், அழகான பெண்களை கட்டாயப் படுத்தி அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு போய் வைத்துக் கொள்ளும் வழக்கமும், முகலாய வேந்தர்களிடம் இருந்து வந்தது.

குணத்திற் சிறந்தவள் பாயி!

பாயி பஹ்வத் தாயி, நற்குண நல்லொழுக்கமும், நல்ல சுபாவமும் உடையவளாய் இருந்து வந்தாள். ஆதலினல் தான், இவள் முஹம்மத் சுல்தானுடைய அணைப்பு என்னும் ஆதரவில் வந்த பின், எல்லா வகையிலும் அவருக்கு இணங்கி, இஷ்டம் போல் நடந்து கொண்டாள். எனவே, அரண்மனையில் ஒரு முக்கியமான மலிக்கா (அரசி) யைப் போல், பாவிக்கப்பட்டு வந்தாள்.

கணவன்—மனைவி இருவரும் ஒருயிரும் ஈருடலுமாக இருந்து வந்தனர் என்று சொல்லப்படுகிறது. சேர்ந்து வாழத் தொடங்கிய பின் இரண்டு பேரும் பிணங்கிக் கொண்டதோ சண்டையிட்டுக் கொண்டதோ பிரிந்துப் போனதோ கிடையாது. எனவே, இளவரசன் முஹம்மத் சுல்தான், இந்த அழகு ராணி வீரயுவதி—தீரப் பெண்

மணி மீது அபார பிரேமையும் தீராத ஆசையும் கொண்டிருந்தார். மன மொத்தால் இனமொத்துப் போகு மல்லவா?

40–வயதில் மாண்ட மன்னன்.

ராணி பாயி பஹ்வத்தாயி, வெகு காலம் மன்னர் முஹமத் சுல்தானுடன் வாழ்ந்திருக்க வில்லை. சில ஆண்டுகளுக்குள் வைதவ்வியக் கோலங் கொண்டாள்; சுமங்கலி என்ற பட்டுப் போர்வையை இழந்து அமங்கலி என்ற கம்பளி போர்த்துக் கொள்ளும் துரதிருஷ்டம் கிடைத்தது அவளுக்கு; அதாவது முஹம்மத் சுல்தான், தமது 41–வது வயதில் கி. பி. 1088-ல் அகால மரண மடைந்து, ராணி பாயை, உலகத்தில் தவிக்க விட்டுச் சென்றார்.

ராஜா கஷ்தூருடைய குடும்பத் தோட்டத்தில் பூத்த அந்த அருமை ரோஜா மலர், தைமூர் வம்சத்து, முகலாய மன்னர்களின் அரண்மனையில் வந்து கொஞ்ச காலத்தில் வாடி வதங்கிப் போயிற்று. தன் ஆயுட் காலம் வரை, ராணி பாயி, வேறு மணம் புரிந்து கொள்ளாமல், தன் துர்பாக்கியத்தை நினைத்து, ஆண்டவனைத் தொழுது வணங்கி, காலங்கடத்தினாள் என்று சொல்லப்படுகிறது.

முஹ்யித்தீன் ஆண்டவர்கள் காரண சரித்திரம்

இது கல்விக் கடலாகிய இமாம் அப்துல்லாஹில் ஷாபிஈ றலியல்லாஹு அன்ஹு அவர்கள், அல்குத்துபுர் றப்பானீ வல்கவுதுஸ் ஸமதானீ ஸையிதினா முஹியித்தீன் அப்துல் காதிரில் ஜைலானீ றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய காரண சரித்திரங்களில் நின்றும் கஷ்பு கருமத்துகளில் நின்றும் அருமையும் அற்புதமான ஹிக்காயத்துகளாக அறபியில் எழுதி யிருந்த கிதாபை, தமிழில் மொழி பெயர்த்து அரிய முறையில் வெளியிடப்பட்ட பெரிய நூலாகும். கலிகோ பைண்டு செய்யப்பட்டுள்ளது. விலை ரூ. 3 – 00

மேற்படி அறபுத் தமிழ் "அல்கன்ஜுல் அப்கம் பீ மனாகிபுல் கவ்துல் அஃலம்" விலை ரூ. 8 – 00

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ், 5.

நாய்க் குட்டியின் ஆகாச யாத்திரை

டி. எப். ஆர். மஆலி சாஹிப் (பாகவி)

எங்கள் ஊரில்

நான் சின்ன பையனாக இருந்த போது, எங்கள் ஊரில் என்னை விடப் பெரிய பையன்கள், காற்றாடி விட்டார்கள். காற்றாடி என்றால், காலணா அரையணாவுக்கு கடையில் விற்கிறதே சின்னச் சின்ன காற்றாடி, அதுவல்ல.

வீட்டுக் கதவு அகல—நீளமுள்ள பெரிய காற்றாடி ஒன்றை உறுதியாகச் செய்தார்கள்; கோணிப்பை தைக்கும் சணல் கயிறைத் திரித்து அதற்கு நூலாக்கினார்கள். காற்றாடியின் வாலுக்கு, கிணற்றில் ஜலம் இறைக்க உதவும் தாம்பு வடத்தை சுற்றி விட்டார்கள்.

நாலைந்து பெரியபையன்கள் சேர்ந்து நூலைப்பிடித்து, காற்றாடியை மேலே பறக்க விட்டார்கள். கொஞ்சம் மேலே போய் காற்றாடி தலைக்குப்புற சாய்ந்து விட்டது.

"வாலில் கனம் போதாது; எதையாவது கனமாகக் கட்டி தொங்க விட்டால் தான் காற்றாடி மேலே கிளம்பும்" என்று, ஒருவன் சொன்னான். சரியென ஏகமனதாக ஒத்துக்கொள்ளப்பட்டது. எந்த கனமான பொருளைக் காற்றாடியின் வாலில் கட்டிவிடுவது? கல்லை கட்டி விடலா மென்று ஒருவன் சொன்னான்: கல்லை கட்டி விட்டால், அது மேலே போய் நழுவி, தலை மேல் வந்து விழும் என்று ஆக்ஷேபணை கிளம்பியது. எனவே வேறு என்ன செய்யலாம் என்று யோசனை செய்தனர்.

அப்போது அங்கொரு நாய்க் குட்டி வந்து விளையாடிக் கொண்டிருந்தது. அதைக் கண்டதும், என் மூளை வேலை செய்தது. "பாய், பாய், இந்த நாய்க் குட்டியை, காற்றாடியின் வாலில் கட்டி விட்டால் கனமாக இருக்கும், காற்றாடியும் ஆகாசத்தில் உயரமாய் பறக்கும்" என்று சொன்னேன்.

காற்றாடிக்கு உரியவன், என்னை தட்டிக் கொடுத்தான். பெரிய பையன்களில் ஒருவன் அந்த நாய்க் குட்டியைப் பிடித்து காற்றாடியின் வாலில் கட்டி விட்டான். காற்றாடியை மேலே தூக்கி விட்டு.

நூல் கயிறை இழுத்தான். காற்றாடி உயரத்தில் கிளம்பிப் பறந்தது. பாபம், தொங்க விடப்பட்டு மேலே தூக்கப்பட்ட நாய்க் குட்டி "வாள், வாள்" என்று ஓயாமல் கத்திக் கூச்சலிட்டது.

இந்த அபயச் சப்தத்தைக் கேட்ட பெரிய மனிதர் ஒருவர், ஒரு பிரம்பை எடுத்துக் கொண்டு வந்து, எல்லாப் பையன்களுக்கும் ஆளுக் கொன்று கொடுத்து விரட்டித் துரத்தினர். பாபம், நாய்க் குட்டி காற்றாடி சகிதம் பொத் தென்று கீழே விழுந்து, கட்டு அவிழ்ந்து, கத்திக் கொண்டு ஓடி உயிர்த் தப்பியது.

இது ஒரு வகை நாய்க் குட்டியின் ஆகாய யாத்திரை!

* * * *

ரஷ்யாவில்

விஞ்ஞானமும் ஆராய்ச்சியும் மலிந்து போயுள்ள ரஷியா தேசத்திலேயும், சில தினங்களுக்கு முன், அபூர்வமான, அற்புதமான அதிசயமான வேறு வகை—நாய்க் குட்டியின் ஆகாய யாத்திரை நடந்தது. அதன் விபரம், தினப் பத்திரிகைகளில் தினந்தோறும் எல்லோராலும் அதிக ஆவலுடனும் சிரத்தையுடனும் படிக்கப்பட்டு வந்த தல்லவா? அதாவது:—

முதல் சந்திரன்

சென்ற அக்டோபர் மாதம் 4-ந் தேதி ரஷ்ய விஞ்ஞானிகள், மகா சக்தி வாய்ந்த 'ராக்கெட்' என்னும் பாணத்தில், ஒரு செயற்கை சந்திரனை அதாவது 130 பவுண்டு எடையுள்ள ஓர் உருண்டை வடிவமான உலோகப் பொருளை வைத்து, வானத்தை நோக்கி செங்குத்தான் எறிந்து (கொளுத்தி) விட்டார்கள். அது சுமார் 500 மைல் உயரத்தில் போய், நம் பூமியின் ஆகர்ஷண சக்திக்கு அப்பால் போய், பல்லாயிரம் ஆண்டுக்கு முன் ஆண்டவன் படைத்த இயற்கைச் சந்திரனுக்குப் போட்டியாய், சின்னஞ் சிறு 'குட்டிச் சந்திரனுகி' பூமியை சுற்றிச் சுற்றி வரத் தொடங்கி விட்டது. அது 95 நிமிஷத்துக்கு ஒரு தரம் பூமியை சுற்றி வருகிறதாம். இது வரை அது (ஒரு மாதத்துக்கு மேலாக) அநேக நூறு விடுத்தம் பூமியைச் சுற்றி வந்திருக்குமாம்.

2—வது சந்திரன்

அந்த அபூர்வ விஞ்ஞானிக் குழுவான ரஷ்யர்கள், அந்த முதல் சந்திரனை (ஸ்புட்னிக்கை)த் தொடர்ந்து இரண்டாவது மிக பெரிய சந்திரனை (முட்னிக்கை) இப்போது, நவம்பர் மாதம் 3-ந் தேதி பறக்க விட்டிருக்கிறார்கள். முதலாவது 'சந்திரனை' விட இது சக்தியிலும், அமைப்பிலும், உருவத்திலும் பெரியதாம். அதாவது

இரண்டாவது செயற்கைச் சந்திரனின் எடை 'அரைடன்' என்கிறார்கள். அப்பப்ப, இவ்வளவு பெரிய கனமான பொருளை, வானமண்டலத்திலே, ஆகாய மண்டலத்திலே பல நூறு மைல் தூக்கிச் செல்ல எவ்வளவு பெரிய சக்தியுள்ள 'ராக்கெட்' (விமானம்) வேண்டும்.

இப்போது இரண்டாவது 'சந்திரன்' 930 மைல் (சுமார் ஆயிரம் மைல்) உயரத்தில் போய், வினடிக்கு 5-மைல் வேகத்தில், வேறு ரேகையில் (வட்டத்தில்) இயற்கைப் பிரகாரம் பூமியைச் சுற்றி வந்து கொண்டிருக்கிறதாம்.

நாய்க் குட்டியின் 'பாக்கியம்'

இதைப் பாபம் என்பதா, பரிதாபம் என்பதா, அதிசயம் என்பதா? ஒன்றும் தெரிய வில்லை. அந்த நெஞ்சுத் துணிவுள்ள ரஷ்ய விஞ்ஞானிகள், அந்தச் சந்திர உருண்டைக்குள், பத்திரமான ஒரு கூட்டுக்குள், பெண் நாய் ஒன்றை, பக்குவமாய் வைத்து ஆகாய மண்டலத்துக்கு "கூண்டோடு கைலாசம்" அனுப்பி விட்டார்கள். அந்த நாய்க்கு வேண்டிய எல்லா சௌகர்யமும் அந்தக் கூண்டில் இருக்கிறதாம். பல நாட்களுக்குப் போதுமான உணவுச் சத்து இருக்கிறதாம்; மூச்சு விட செயற்கைக் காற்று இருக்கிறதாம்; அபார ஒளியைப் பார்க்க மூக்குக் கண்ணாடி இருக்கிறதாம்; சீதோஷ்ணம் தாக்காதபடி "ஏர்கண்டிஷன்" வசதி இருக்கிறதாம்?

ஆஹா! இன்னும் என்ன வேண்டும், அந்த நாய்க் குட்டிக்கு! பல நாள் பயிற்சியும் பழக்கமும் அளிக்கப் பட்டிருக்கிறதாம். 'லாயிக்கா' என்ற பெயருள்ளது அந்த நாய்க்குட்டி! எல்லாம் அதன் பிறந்த நேர பாக்யம் போலும்! பாபம், அது தப்பித்து ஓடி விட முடியுமா? அதைக் கூண்டில் அடைத்து கட்டிப் போட்டுள்ளார்கள்.

"அந்த நாய் உள்ள 2-வது செயற்கைச் சந்திரனிலிருந்து ரேடியோ செய்திகள் வருகிறது; சமிக்ஞைகள் கிடைக்கிறதாம்; அந்த நாய் பிராணபத்து இல்லாமல் சௌக்கியமாக (தைரியத்தாகவே) இருக்கிறது. கூடிய சீக்கிரம் (?) அதை, இங்கிருந்த வண்ணமே, ரேடியோ சுவிச்சை (பட்டனைத்) தட்டி, பூமிக்கு கொண்டு வந்து விடுவோம். அது சந்திரனிலிருந்து விடு பட்டு கூண்டுடன் பூமியை நோக்கி விழுந்து வரும். சுமார் 250 மைல் நம் பூமிக்கு அருகில் வரும் போது, கூண்டு திறந்து 'பாரச்சூட்' என்னும் குடையில் தொங்கிக் கொண்டு அந்த நாய் பூமியில் வந்து 'க்ஷேமமாக' இறங்கி விடும்" என்று ரஷ்ய விஞ்ஞானிகள் (நவம்பர் மாதம் 15-ந் தேதி வரை விளம்பரம் செய்தார்கள்.

ஆண்டவனே துணை!

ரஷ்ய விஞ்ஞானிகள், ஆகாயத்திலே (திரிசங்கு போல்) தேங்கித் தவிக்கும் அந்த நாய்க்கு, பூமியிலிருந்து உதவி செய்ய முடியும் என்று விளம்பரம் செய்தார்கள். நாளைக்கே நாய் திரும்பி வந்து விடும் என்று சொன்னார்கள். இரண்டொரு வாரங்கள் கழிந்து விட்டன. நாய் திரும்பி வந்ததாக செய்தி வரக்காணோம்! ஆனால் நாய் சௌகரியமாய் செத்து விட்டது என்று செய்தி அனுப்பிவிட்டார்கள்.

பரிதாபம்! அந்த பெண் நாய்க் குட்டி 'லாயிக்கா' இப்போது உயிரோடு தான் இருக்கிறதா, செத்துக் கரிந்து போய் விட்டதா? ஒன்றுமே தகவல் (தெரிய) வில்லை. ஒரு சிலர், "அந்த நாய் செத்துப் போய் தானிருக்கும், செயற்கை சந்திரன் திரும்பி வரமாட்டாது; இதெல்லாம் ரஷ்யர் சாமர்த்தியமாய், கட்டி விடும் பொய்ப் பித்தலாட்டமான பேச்சு, என்றெல்லாம் சொல்கின்றனர்.

நாம் என்ன சொல்வது! அப்படி அந்த 'பேதை' நாய் ஆகாயத்தில் இருந்தால், அதற்கும் எல்லாம் வல்ல ரஹ்மானும் ரஹீமுமான ஆண்டவன் தான் துணை!

மூன்றாவது சந்திரன்

இனி மூன்றாவதாக ரஷ்யாவினால் அனுப்பப்படும் செயற்கைச் சந்திரனில், பூமியில் உயிர்வாழும் மனிதரும் அனுப்பப்படுவார்களாம். மனிதன், சந்திர கோளத்தில் போய் தங்கி, அங்கிருந்து பூமிக்கு திரும்பி வருவானாம். பிறகு பலர், அங்கு போய் வருவாராம். சந்திர லோகத்துக்கும் பூமி லோகத்துக்கும் 'சர்விஸ்' ஆரம்பமாய் விடுமாம். வானில் புது உலகம் கண்டு பிடித்த கௌரவம் ரஷ்யருக்குத் தானாம்.

அமெரிக்க விஞ்ஞானிகளும் மனிதரை வானுக்கு அனுப்பப்போகிறார்களாம். உலகம் அதையும் ஆவலுடன் எதிர் பார்க்கிறது. என்ன வேண்டுமானாலும் நடக்கட்டும், பார்ப்போம்! அல்லாஹு அக்பர்.

187069

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

தப்ஸீறுல் ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத்

தமிழ் நாட்டு முஸ்லிம்களது நன்மைக்காக திருக்குர்ஆனின் தப்ஸீரை தமிழ் பாஷையில் மிகவும் விளக்கமாகவும், தெளிவாகவும், சங்கை பொருந்திய ஸுன்னத்து வல்ஜமாஅத்தின் உலமாக்களாலும் இமாம்களாலும் எழுதப்பட்ட தப்ஸீர்களை ஆதாரமாகக் கொண்டு, மிகப் பிரயாசையோடு யாவரும் ஆமோதித்து புகழத்தக்க விதமாய் விளக்கத்தோடு இத் தப்ஸீரை எழுதி அச்சிட்டு வெளியிட்டிருக்கிறோம்.

இந்த தப்ஸீரில் குர்ஆன் ஆயத்துகளை அறபியில் அழகாக எழுதி போட்டோ பிளாக் செய்யப்பட்டு தனித்தனியாக ஆங்காங்கு அமைத்து அதன் கீழ் சரியான தர்ஜுமாவும், தப்ஸீர் என்னும் விரிவுரையும், வியாக்யானமும், ஷஃனு நுஸூல் என்னும் ஒவ்வொரு ஆயத்தும் இறங்கிய காரணங்களும், அதற்கேற்ப ஹதீது, ரிவாயத்து, ஹிக்மத்து, பாயிதா, கிஸ்ஸா, அஜீபா முதலிய அரும் பெரும் ஆதாரங்களும் ஒருங்கே சேர்த்து அமைக்கப் பெற்றிருக்கின்றன.

முதல் பாகம் : இந்த தப்ஸீர் ஸூறத்து பாத்திஹா—பகருவி லிருந்து ஸூறத்துன்னிஸா முடிய (ஒரு மன்ஸில்) 5¼-ஜுஸு வரை இதன் விலை ரூ. 10–00

இரண்டாம் பாகம்: சூறத்துல் மாயிதா முதல் ஸூறத்துத் தெளபா முடிய (சுமார் 5-ஜுஸு) இரண்டாம் பாகமாக வெளி வந்திருக்கிறது. இதன் விலை ரூ. 10–00

மூன்றாம் பாகம்: சூரே யூனுஸ் முதல் ஸூறத்துக் கஹ்பு முடிய 7-சூருக்களின் தப்ஸீர் மூன்றாம் பாகமாக வெளி வந்திருக்கிறது. இதன் விலை ரூ. 10–00

நான்காம் பாகம்: ஸூரத்துல் இஸ்ராஉ முதல் ஸூரத்து நூர் முடிய 8 ஸூராக்களின் தப்ஸீர் நான்காம் பாகமாக வெளி வந்திருக்கிறது. இதன் விலை ரூ. 10–00

5-ம் பாகம் அச்சாகிறது.

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு எ

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதரா

இனம்! இனம்!!

ஹமீதிய்யா முஸ்லிம் காலண்டர் 1958.

இங்கிலீஷ், தமிழ், அரபு ஆக மூன்று தேதிகளும் 3 கலர்களில் அச்சிடப்பட்டு, ஒரு மாதத்திற்கு ஒரு ஷீட்டாக 12 ஷீட்டுகள் அடங்கியுள்ளது. ஒவ்வொரு ஷீட்டிலும் தொழுகைகளின் நேரங்களாகிய அவ்காத்துஸ் ஸலாத்தும் சேர்க்கப்பட்டுள்ளது.

எங்களிடமிருந்து ஒரே நேரத்தில் எங்களது சொந்த பிரசுரங்களுள் ரூபாய் 10க்கு குறைவில்லாமல் சொந்த உபயோகத்திற்கு கிதாபு, புஸ்தகம் தருவிப்பவர்களுக்கு ஷை காலண்டர் ஒன்று (எங்களி...ம் காலண்டர் ஸ்டாக் யிருக்கும் வரை) ...மாகச் சேர்த்து அனுப்பப்படும்.

...ம் :—

எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
..., ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.